# நான் கண்ட பெரியார்



கோவை அ. அய்யாமுத்து

கல்பனா...

நண்பர் வரிசை—1

# நான் கண்ட பெரியார்

கோவை அ. அய்யாமுத்து

எழுதியது


தமிழகம்

59, பிராட்வே-சென்னை-1.

முதற் பதிப்பு : மே, 1957.

விலை ரூ. 0-75

அறிவிப்பு

எல்லா உரிமையும் ஆசிரியரைச் சேர்ந்தது. இதில் உள்ளவற்றைக் கூட்டியோ, குறைத்தோ, பிரித்தெடுத்தோ யாரும் வெளியிடக் கூடாது.

20939

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

# நான் கண்ட பெரியார்

இந்த உலகத்திலே நான் யாரை மறந்தாலும் எனது மாபெரும்நண்பர் ஈ. வே. இராமசாமிப் பெரியாரை மறக்க முடியாது. சுமார் பத்தாண்டு காலம் அவரோடு நான் அவ்வளவு நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவருடன் எனக்கிருந்த நெருங்கிய பழக்கம் விட்டுப்போய் இப்போது இருபது ஆண்டுகளுக்கு மேலாகியும், நேற்றும் இன்றும் அவருடன் நெருங்கிப் பழகி வருவது போன்ற உணர்ச்சி என் உள்ளத்திலே பசுமையாக நின்று வருவதை நான் என்னவென்று சொல்லுவேன்!

இம்மாதம் இரண்டாந்தேதி [1957 ஏப்ரல்] அவரை ஏர்க்காட்டு மலை உச்சியில் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பு தற்செயலாக நேர்ந்ததென்று சொல்ல முடியாது. நானே அவரைப் பார்க்கவேண்டும் என்று சென்றிருந்தேன். ஏர்க்காட்டுக் கடைத் தெருவில ஒரு மாடி வீட்டில் இருந்தார். வீட்டுக்கு முன்புறம் ரோடோரத்தில் அவருடைய மோட்டார் வேன் என்னும் வாகனம் நின்றிருந்தது. அதன் மேல் ஒருவன் ஏறி நின்றுகொண்டு, வீட்டின் கேட்டுக்குச் சாயம் அடித்துக் கொண்டிருந்தான். மணியம்மையும் அவர் தம்பி தியாகராசனும் திண்ணையில் நின்றிருந்தார்கள். "மோட்

டார் வேன் தானு உங்களுக்கு ஏணியாக அகப்பட்டது?" என்று கேட்டுக்கொண்டே திண்ணைமீது ஏறினேன். என் கையிலிருந்த நறுமணங் கமழ்ந்த சண்பக மலர்களை மணியம்மை கையிற் கொடுத்தேன். அன்று நான் மணியம்மையைப் பார்த்தது இரண்டாந் தடவை. முதற் தடவையாக அவரை நான் பார்த்தது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னுல். அம்முதற் சந்திப்பின் விநோத சம்பவத்தைப் பின்னுல் சொல்லுகிறேன். அப்போது நான் பார்த்த மணியம்மை நல்ல பருவத்தில் இருந்தாள். முகத்திலே பொலிவும், கண்களிலே குறும்பும், உடலிலே யௌவனத்தின் தெம்பும் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. இப்போது நான் பார்க்கும் மணியம்மையின் முகத்திலே சோர்வும், கண்களில் இருளும், உடலிலே தளர்வும் சூழ்ந்துகொண்டிருந்தன. நான் கொண்ட இம்மதிப்புத் தவருகவும் இருக்கலாம். மணியம்மை கருப்புப் புடவை கட்டிக்கொண்டிருந்தார். தலைக்கு எண்ணெயிட்டுச் சீவி முடிக்காததாலும் உடலிலே ஒரு குண்டு மணியளவுப் பொன்னும் மின்னுது இருந்ததாலும், தலையில் பூவோ, நெற்றியில் பொட்டோ, கைகளில் வளையலோ நமது பெண் இனத்திற்குரிய எதுவும் இல்லாததாலுமோ என்னவோ, மணியம்மை கணவனை இழந்த விதவைபோல் என் கண்களில் காட்சி அளித்தார்கள்.

ஒடுக்கமான படிகளின் மீதேறி மேல் மாடிக்குச் சென்றேன். பெரியார் தாமே பிழிந்தெடுத்த கருப்புத் திராட்சைப் பழ ரசத்தை அவசர அவசரமாகக் குடித்து விட்டு, மீசையையுந் தாடியையும் துடைத்துக்கொண்டே என்னை வரவேற்ருர். அவர் குடித்த பழரசத்தின் ஒரு பகுதியை அவர் உடுத்தியிருந்த வேஷ்டியும் குடித்திருந்தது.

என் பொது வாழ்க்கையில் நான் பெரியாரைத் தாக்கியதைப்போல வேறு எவரையும் தாக்கியதில்லை.

அப்படியிருந்தும் அவர்மீது எனக்கு நீங்காத அன்பு. அவருக்கும் என்மீது வற்ருத வாஞ்சை! இந்த உறவின் திறத்தை நான் என்னவென்று சொல்வது!

பெரியாரை வெறுங்கையோடு நான் என்றும் பார்த்ததில்லை. கையில் நான்கு முந்திரிக் கொட்டை யாவது கொண்டுபோவேன். அன்று கொண்டு போயி ருந்த ஜிலேபியை அவர் முன் எடுத்து வைத்தேன். வெகு பிரியமாகச் சாப்பிட்டுக் கொண்டே என்னுடன் பேசினர்கள்.

மணியம்மை மேலே வந்தார்கள். "இவரை உனக்குத் தெரியுமா? நாங்கள் இருவரும் வெகு நாளைய நண்பர்கள். கதருக்கும் காங்கிரசுக்கும் தமிழ் நாட்டில் அஸ்திவாரம் போட்டவர்கள். நாங்கள் இருவரும் எத்தனை ஊர்கள் சுற்றியிருக்கிறும் அந்தக் காலத்தில். இதோ, பல் இல்லாத எனக்கு ஜிலேபி கொண்டுவந்திருக் கிருர். பல் உள்ள உனக்கு நல்ல கடினமான பலகாரங் களும் கொண்டுவந்திருக்கிருர், சாப்பிடு" என்ருர் பெரியார், தமக்கே இயல்பான நடையில்.

பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். காங்கிரஸும், காமராஜரும், கக்கன் அவர்களும் எங்கள் பேச்சிலே அடிபட்டார்கள்.

"காமராஜரை நான் சந்திப்பதே கிடையாது. அவருடன் நான் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதில்லை. ஏதோ ஒரு தமிழன். வெகு காலமாய் ஆட்சி செலுத்திய ஆச்சாரியாரை ஒழித்துக் கட்டினர் என்பதிலே ஒரு திருப்தி. அதனல் அவரை ஆதரித்து நான் பிரசாரம் செய்கிறேன் என்பதல்லாமல் வேறில்லை" என்ருர் பெரியார்.

"இராஜாஜியை ஒழித்துக் கட்டியது நான்தான். காமராஜ் அல்ல. நான் இல்லையேல் காமராஜும் இல்லை" என்றேன்.

"அதெப்படி? அந்த இரகசியம் எனக்குத் தெரியாதே!" என்றார் பெரியார்.

"அது நடந்தது 1940-ல். சென்னையில் இந்தி பிரசார சபைக் கட்டிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடந்தது. இராஜாஜி என்னைக் கூப்பிட்டு, சி. பி. சுப்பையா பெயரை பிரேரேபிக்குமாறு சொன்னார். அவரைக் காட்டிலும் வேறு யாராவது நல்லவர் பெயரைச் சொல்லுங்கள் என்றேன். இத்தகைய பதிலை இராஜாஜி அவர்கள் என்னிடமிருந்து கனவிலும் எதிர்பார்த்திருக்கமாட்டார். அவருக்கும் எனக்கும் நாலைந்து நிமிஷம் தர்க்கம் நடந்தது. முடிவில் முத்துரங்க முதலியாரைக் கூப்பிட்டுச் சுப்பையா பெயரைப் பிரேரேபிக்கச் சொன்னார். சுப்பையா மூன்று ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்றார். காமராஜ் ஜெயித்தார். மொத்த ஓட்டுகள் 203. காமராஜ் 103. சுப்பையா 100 ஓட்டுகள். அத்தேர்தலில் நானும், சர்க்கா சங்கத்தில் என்னுடன் வேலை செய்த எண்மரும் காமராஜுக்கே ஓட்டுச் செய்தோம். அன்று காமராஜ் தோற்றிருந்தால் அவர் என்றென்றும் தலை எடுத்திருக்கவே முடியாது" என்று சொன்னேன்.

"சரித்திரம் மீண்டும் நிகழும் என்பார்கள். அதே போல 1950-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஸ்தானத்துக்கு சுப்பையாவைக் கொண்டுவர எங்கள் சி. சுப்ரமணியம் பகீரதப் பிரயத்தனம் செய்தார். அப்போதும் நான் காமராஜுக்கே ஆதரவாகநின்றேன். பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் சுப்பையா, ஏன் சுப்ரமணியம் தோற்றார். அதற்கடுத்தாற்போல் கோவை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தலில் சுப்ரமணியம் எனக்கெதிராக வேலை செய்து என்னைத் தோற்கடித்து சென்னையில் நீங்கள் என்னைத் தோற்கடித்தீர்கள். இங்கே நான் உங்களைத் தோற்கடித்தேன் என்று அவருக்கே உரிய சிரிப்புக் காட்டினார்

உங்கள் வெற்றி நேர்மையான முறையில் ஏற்பட்டிருந்தால் நானும் சிரித்திருப்பேன் என்று கூறி அக் கூட்டத்தைவிட்டு வெளியேறினேன். அதிலிருந்து கடந்த ஏழு வருஷங்களாக நான் காங்கிரசுக்கே முழுக்குப் போட்டுவிட்டேன். அதனுல் காங்கிரசுக்கு நஷ்டமே ஒழிய, எனக்கு எவ்வித நஷ்டமும் இல்லே" என்றேன்.

"மந்திரிகளில் ஒருவராகக் கக்கன் பெயர் அடிபடுகிறதே. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலேவராக யாரைப் போடுவார்கள் ?" என்ருர் பெரியார்.

"ஏன், உபயதுல்லா இருந்தே இருக்கிருர். அந்த ஸ்தானத்துக்கு ஆமாஞ்சாமிகள் தானே வேண்டும்" என்றேன்.

"ஆமாம், ஆமாம். நீங்கள் சொல்லுவது முற்றிலும் சரி. அந்தக் காலத்தில் ஆச்சாரியார் சொற்படி நான் நடந்ததால்தான் என்னேக் காரியதரிசியாகப் போட்டார்கள். அப்புறம் பிரசிடெண்டாகப் பிரமோஷனும் கொடுத்தார்கள்" என்று சொல்லிக்கொண்டே நாயக்கர் கலகல வென்று சிரித்தார். அப்பொல்லாத தாடி அவர் சிரித்த காட்சியை நான் முற்றிலும் அநுபவிக்க முடியாமல் தடுத்துவிட்டது.

"அதே டெக்னிக் தான் இன்றும் அநுசரிக்கப் பட்டு வருகிறது" என்றேன். இவ்வாருகப் பல விஷயங்கள் பேசிக்கொண்டிருந்துவிட்டு நாயக்கரிடம் விடைபெற எழுந்தேன்.

அவசர அவசரமாக அறையினுள் நுழைந்தார். நானும் அவரோடு பின் சென்றேன். அலமாரியைத் திறந்து மூன்று ஆரஞ்சுப் பழங்களும் ஒரு மாம்பழமும் எடுத்து என் தோளில் தொங்கிய பையினுள் போட்டு என்னேப் பேராச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டார்.

அவர் கட்டிலின் அருகே கரைத்த சாயத்தோடு ஒரு 'டிரம்' இருந்தது. "இதையேன் இங்கே வைத்திருக்கிறீர்கள். ஓரே நாற்றம் அடிக்கிறதே!" என்றேன்.

“ என் கஷ்டம் உங்களுக்கென்ன தெரியும்? வேறு எங்காவது வைத்திருந்தால் எவனாவது சாயத்தை ஊற்றிக்கொண்டு போய்விடுவான்” என்று அவர் கூறிய பதிலைக் கேட்டு, நான் எத்தகைய ஆச்சரியமும் கொள்ளாது மாடியை விட்டுக் கீழே இறங்கினேன்.

* * *

எனக்கும் நாயக்கருக்கும் நெருங்கிய பழக்கம் 1923-ம் ஆண்டின் துவக்கத்தில் ஏற்பட்டது. இரங்கோனில் ஓராண்டிருந்துவிட்டு நான் அப்போதுதான் கோவைக்குத் திரும்பியிருந்தேன். கோவையில் நானும், எனது நண்பர் சுப்ரி அவர்களும், செட்டிப்பாளையம் அய்யாசாமிக் கவுண்டரும் தீவிரமான காங்கிரஸ் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தோம். அடிக்கடி நாயக்கரோடும் சேர்ந்து பல ஊர்களுக்குச் செல்வோம். அவ்வாறு செல்லும்படியான இடங்களுக்குக் கதரும் கொண்டு போய் விற்போம். நாயக்கர் அப்போது தமிழ்நாடு கதர் போர்டின் தலைவராக இருந்தார். கதர் விற்பனை செய்வதற்காக அவரிடம் ஒரு நாள் ஐநூறு ரூபாய்க்குக் கதர் கடனாகத் தரும்படி நானும் அய்யாசாமிக் கவுண்டரும் கேட்டோம். ரொக்கம் செலுத்தினாலன்றிக் கொடுக்க முடியாதெனச் சொல்லிவிட்டார். புரோநோட் எழுதித் தருவதாகவும் சொன்னோம். அதற்கும் அவர் இசையாத கொடாக்கண்டனாக விளங்கினார். முடிவில் ரொக்கம் செலுத்திக் கதர் எடுத்து வந்தோம்.

* * *

சேலம் ஜில்லா, திருச்செங்கோடு தாலூகா மல்லசமுத்திரம் என்ற ஊரில் ஒரு மகாநாட்டுக்குச் சென்றிருந்தோம். மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டியார் அவசர அவசரமாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், நாயக்கருக்குப் பசிதாங்க முடியவில்லை. “ஊரைச் சுற்றிப் பார்த்து வருவோம் வாருங்கள்” என என்னை அழைத்தார். ஒரு தெருத் திண்ணையில் ஒரு

அம்மாள் புட்டுச் சுட்டுக்கொண்டிருந்தாள். நாயக்கர் ப்ள மளவென்று உள்ளே நுழைந்து புட்டுகள் வாங்கினுர். நாங்கள் இருவரும் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவும் சமயத்தில், எங்களைத் தேடி ஊரெல்லாம் சுற்றிய மகாநாட்டுப் பிரமுகர்கள் அங்கே வந்து மூக்கிலே கையை வைத்துக்கொண்டார்கள்.

* * *

நாயக்கரின் முதல் மனைவியின் பெயர் நாகம்மாள். நல்ல அழகுள்ளவர். அழகுக்கேற்ற குணமும் படைத்தவர். அவர் முகத்திலே புன்முறுவல் எப்போதும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும். நாயக்கர் கஞ்சத்தனத்திலே பேர்போனவர். அந்த அம்மாள் அதற்கு முற்றிலும் மாருனவர். விருந்தினர்களை உபசரிப்பதில் நாகம்மைக்கு அளவற்ற ஆனந்தம். அவர் வீட்டுக்கு வந்தவர்கள் எவரும் சாப்பிடாமல் போனது கிடையாது. என்னிடம் அம்மையாருக்கு அலாதியான பிரியம். நான் எதைப் பிரியமுடன் சாப்பிடுவேன் என்று அவர்களுக்குத் தெரியும். என் தலையைக் கண்டவுடன் அடே! ராமா! என்று தன் வேலைக்காரப் பையனைக் கூப்பிட்டு மார்க்கட்டுக்கு அனுப்பிவிடுவார். ஒரு நாள் நானும் நாயக்கரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் நாயக்கர் என்னைப் பார்த்து "நீங்கள் தினமும் இங்கு வந்து தொலைவது தானே!" என்ருர். "ஏன் அப்படி? தினமும் வருவதற்கு ரயில்காரன் மாமனுரா?" என்றேன். "இல்லை, நீங்கள் வந்தால் தானே இங்கே நல்ல சாப்பாடு கிடைக்கிறது!" என்ருர். என்மீது அவருக்கு அவ்வளவு பொருமை! பணம் செலவாகிறதே என்ற கடு கடுப்பு!

* * *

நாயக்கரின் தகப்பனுர் ஸ்ரீ வெங்கட்டப்ப நாயக்கர் தருமவான். தெய்வபக்தி உள்ளவர். ஈரோட்டில் ஒரு சத்திரம் கட்டி வைத்திருக்கிருர். அச் சத்திரத்தில்

வந்து தங்குவோருக்குச் சாப்பாடு போட மாதம் நூற்றைம்பது ரூபாய் ஒதுக்கிவைத்து உயில் சாஸனமும் எழுதிவைத்துப் போயிருக்கிருர்கள். ஆனல் சத்திரத்தில் யாருக்கும் சாப்பாடு போடுவதில்லை. இதைப் பற்றி நாயக்கரிடம் ஒரு நாள் கேட்டேன். "ஏன் சத்திரத்தில் ஆக்கிப்போட்டால்தான் சோரு? இங்கே வந்து தின்றுவிட்டுப் போகிறீர்களே, இது யார் அப்பன் வீட்டுச் சொத்து?" என்ருர் கடுகடுப்பாக. பாவம் நாயக்கர்! மாதம் ஆயிரக் கணக்கில் வருவாய் இருந்தும் உயில் சாஸனப்படி அவர் தமது செலவுக்காக மாதம் ஐம்பது ரூபாய்தான் எடுத்துக்கொள்ள முடியும். ஆதலால் சத்திரத்துப் பணத்தையும் தன் வீட்டுக் கணக்கில் அவர் செலவு செய்ததில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

*     *     *

நாயக்கரின் குடும்பத்தை நடத்துவதற்கு அவருக்கும், அவருடைய அண்ணன் திரு. கிருஷ்ணசாமி நாயக்கருக்கும் உயில் சாஸனப்படி முறை உண்டு. நாயக்கர் முறையில் நிர்வாகம் நடக்கும்போது, நாயக்கர் பழைய வீடுகளையெல்லாம் இடித்துப் புதுவீடுகள் கட்டுவார். கிருஷ்ணசாமி நாயக்கரின் நிர்வாகத்துக்கு வரும்போது அவர் தங்க நகைகள் செய்வார். தங்கபஸ்பங்கள், லேகியங்கள் செய்வார். இராமதாரிகளுக்கு விசேஷ விருந்துகள் வைப்பார். தீர்த்த யாத்திரைகளுக்குப் போய்வருவார். ஒருசமயம் தம்பியின் நிர்வாகத்தில் இருக்கும்போது தம் குழந்தை சம்பத்துக்கு திருப்பதியில் முடி எடுக்கவேண்டும் என்பதற்காக செலவுக்குப் பணம் கேட்டார். நாயக்கர் முனகிக்கொண்டே நூறு ரூபாய் கொடுத்து இந்தா தொலை என்ருர். பெரிய நாயக்கர் நிறத்திலும், குணத்திலும், செயலிலும் தங்கமானவர்.

*     *     *

நாயக்கரின் அம்மாள் தங்க விக்கரகம்போல் இருப்பார். அவருக்கு ரொம்பவும் வயதாகி இருந்தது. என்றாலும், தனியாக வைதீக முறையில் வாழ்ந்து வந்தார். நாயக்கரைப் பார்க்கவேண்டுமென்று ஒரு முறை சொல்லி அனுப்பினர். நாயக்கரோடு நானும் போயிருந்தேன். "என்னடா ராமா, சௌக்யமா? நீ செய்யும் காரியங்களிலிருந்து உன்னை எது காப்பாற்று கிறதென்று உனக்குத் தெரியுமா? நான் போடும் ராமந் தானடா உன்னைக் காப்பாற்றுகிறது" என்றார் அப் பாட்டியார். அவர் உடம்பிலே எப்போதும் பன்னிரண்டு நாமங்கள் இருக்கும். தன் தாயார் துடைப்பத்துக்கும் நாமம் போடுவார் என்று நாயக்கர் வேடிக்கையாகச் சொல்வார்.

*　　　*　　　*

1924-ம் வருஷத்தில் நாயக்கரும் நானும் வைக்கம் சத்யாகிரகத்துக்குப் போயிருந்தோம். வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்ந்த சாதிக் காரர் போகக்கூடாதென்பது கேரள நாட்டு வைதீகம்.

ஆனால், அத்தெருக்களிலே பன்றிகள், நாய்கள் எல்லாம் போகலாம். இந்து மதத்தைச் சேராதவர்கள் எவரும் தங்குத் தடையின்றிப் போகலாம். இந்த அக்கிரமத்தை எதிர்த்தே சத்தியாக்கிரகம் நடை பெற்றது. பல ஊர்களுக்குச் சென்று நானும் நாயக்கரும் பேசினோம். ஒரு நாள் ஆலப்புழையில் இருவரும் பேசி விட்டு, அவ்வூர் வக்கீல் வீட்டில் தங்கியிருந்தோம். தமது பிரசங்கத்தை எழுதி முடித்தால் 'நவசக்தி'க்கு அனுப்பலாம் என்றார் நாயக்கர். ஆகட்டும். காலையில் எழுதி விடுகிறேன் என்றேன். இல்லை இப்போதே எழுதிவிடுகிறேன். கொஞ்சம் காகிதமும் ஒரு பென் சிலும் கொடுங்கள் என்றார். வக்கீல் வீட்டிலிருந்து ஒரு கத்தை காகிதமும் பென்சிலும் வாங்கிவந்து கொடுத்து

விட்டு, நான் உறங்கிவிட்டேன். காலையில் கண் விழித் ததும் எங்கே பிரசங்கம் எழுதி முடித்துவிட்டீர்களா என்றேன். நாங்கள் படுத்திருந்த அறையின் மூலையைக் காட்டினார். நான் கொடுத்த காகிதங்கள் அத்தனையும் எழுதி எழுதிக் கிழித்துக் கிழித்துப் போட்டிருந்தார். சனியன், ஒன்றும் எழுதவரவில்லை என்றார். அக் காலத்தில் நாயக்கரால் அப்படித்தான் எழுதிக் கிழிக்க முடியும். நான் சிரித்துக்கொண்டே, அவர் முன்னாள் பேசியதனைத்தையும் எழுதி அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்துப் பார்த்து மகிழ்ந்தார். 'வைக்கத் தப்பன் வழி காட்டவேண்டும்', 'வைக்கம் வீரரின் சொற்பொழிவு' என்ற தலைப்புகளின்கீழ் அப்பிரசங்கம் சென்னையிலிருந்து வெளியான திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் நவசக்தியில் வெளிவந்தது.

* * *

வைக்கத்துப் போர்க்காலத்தில் நாயக்கரும் நானும் மோட்டாரிலும் படகுகளிலும் திருவாங்கூர் முழுவதும் பிரயாணம் செய்தோம். கோட்டார் டாக்டர் எம்பெரு மாள் நாயுடு தமது காரிலேயே எங்களுடன் பிரயாணம் செய்தார். சிட்டேடத்தில் சங்குபிள்ளை என்பவரும் எங்களுடன் வந்திருந்தார். நாயக்கர் கையில் எப் போதும் பாரதியாரின் பாட்டுப் புஸ்தகம் இருக்கும். மோட்டாரில் போய்க்கொண்டே, வந்தே மாதரம், வாழ்க செந்தமிழ், மறவன் பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவைகளை உரக்கப் பாடுவார். படகுகளில் போகையில் கரை யோரத்தில் விற்கும் முந்திரிக் கொட்டை, காரவடை, அவித்த முட்டை, இளநீர் ஆகியவைகளை நான் வாங்க வாங்க அவர் வயிற்றை நிரப்பிக்கொண்டே வருவார். நாங்கள் கன்னியாகுமரிவரை சென்று திரும்புகையில் திருவனந்தபுரத்தில் எங்கள் நால்வருக்கும் தடை உத்தரவு வழங்கப்பட்டது. அதை யார் மீறுவது என்று சீட்டுப் போட்டுக் குலுக்கி எடுக்க 'என் பெயர்'

வரவே, சிரயங்கீழ் என்ற ஊரில் நான் கைதாகிச் சிறை சென்றேன்.

*　　　*　　　*

தண்ணீரைக் கண்டால் நாயக்கருக்குப் பிடிக்காது. வெந்நீரும் அப்படித்தான். எவ்வளவு தொலை தூரம் பிரயாணம் செய்வதென்றாலும் பெட்டி படுக்கை ஒன்றும் கிடையாது. ஒரு நீளமான சுருக்குப் பையில் பிரயாணத்துக்கு வேண்டிய வேஷ்டி, அரைக்கைச் சட்டை துண்டு, மடித்துவைக்கக் கூடிய 'மல்காஸ்' என்னும் சிங்கப்பூர்பாய், ஒரு பித்தளைச் செம்பு ஆகியவைகளைப் போட்டு நாகம்மையார் கொடுப்பார்கள், நாயக்கரின் தோளில் காசுக்கட்டி நிறத்தில் ஒரு பெரிய துப்பட்டி இருக்கும். எத்தனை நாள் பிரயாணம் செய்தாலும், குளிக்காமலும், போட்ட சட்டைகளை மாற்றாமலும் அழுக்குச் சாமியாராக வீடுவந்து சேர்வார். இக்கோலத்தில் ஒரு நாள் திரும்பி வந்த நாய்க்கர் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்து நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். குளிப்பதற்கு வெந்நீர் தயாராக இருக்கிறது என்று நாகம்மையார் பல தடவை சொன்னார்கள். "நான் குளிக்காவிட்டால் உனக்கென்ன ? உன் வேலையைப் பார்" என்று சீறினார் நாயக்கர். நாகம்மையார் ஒரு கிண்ணம் நிறைய நல்லெண்ணெய் கொணர்ந்து நாயக்கரின் மொட்டைத் தலையில் கொட்டினார்கள். "நீ என்ன செய்தாலும் நான் குளிக்கப் போவதில்லை" என்று சொல்லிக்கொண்டே நாய்க்கர் தமது மேல் துண்டினால் தலையைத் துவட்டிக் கொண்டார். நாகம்மையார் மௌனமாகப் பின் தொட்டிக்குச் சென்று எருமைத் தாளியிலிருந்த நாற்றம் பிடித்த—தவிடு புண்ணாக்குக் கலந்த—நீரை ஒரு பெரிய செம்பு நிறையக் கொண்டுவந்து நாயக்கரின் தலையில் கொட்டினார். "செய்யடி குண்டி, இன்னும் என்னதான் செய்வாயோ செய்" என்று சொல்லிக் கொண்டே

நாயக்கர் அசையாக் கட்டையாய் அமர்ந்திருந்தார். நானும் மற்றவரும் அவரைக் கெஞ்சிக் கூத்தாடி அன்று குளிக்கும்படி செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

* * *

*1924*-ல் பெல்காமில் மகாத்மா காந்தியின்கீழ் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டு முகாமில் ஒரு வீட்டில் தங்கிருந்தோம். டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அந்த ஜாகையை நூறு ரூபாய் வாடகைக்குப் பேசி அமர்த்தியிருந்தார். தருமபுரி ஜமீன்தார் நடேசன் செட்டியார், புதுப்பாளையம் மிட்டாதார் ரத்தின சபாபதி கவுண்டர், வரதராஜுலு நாயுடு, நாயக்கர், சுரேந்திரநாத் ஆரியா, சர்க்கரை செட்டியார், பவானிசிங், டாக்டர் தர்மலிங்கம் இன்னும் பல பேர்கள் அங்கே தங்கியிருந்தோம். ஒரு நாள் இரவு நாங்கள் எல்லோரும் சாப்பிடுவதற்குப் புறப்பட்டோம். "எனக்குப் பசியில்லை, நீங்கள் போய்வாருங்கள்" என்று சொல்லி நாய்க்கர் தங்கிவிட்டார். நாங்கள் திரும்பிவருகையில் கிலாபத் மகாநாட்டு ஓட்டலிலிருந்து நான் ஒன்றரை ரூபாய்க்குப் பிரியாணி வாங்கிக் கட்டிக் கொணர்ந்து படுத்து உறங்கி கொண்டிருந்த நாய்க்கரின் தலைக்குப் பக்கத்தில் வைத்து விட்டேன். பிரியாணியிலிருந்து அடித்த மணம் நாய்க்கரின் தூக்கத்தைக் கலைத்தது மல்லாமல் அவர் பசியையும் கிளறிவிட்டது. எழுந்து, உட்கார்ந்து, கட்டை அவிழ்த்து, "உம், நான் பசியில்லை என்று எவ்வளவு சொல்லியும் கேட்டார்களா, இனி நான் இதைத் தின்று தான் தொலைக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே, வெளியில் காத்திருந்த நாய்களுக்கும் மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் காலி செய்துவிட்டார். காசு கொடுத்து வாங்கியதை வீணாக்க நாய்க்கரால் என்றும் முடியாது.

* * *

பெல்காம் காங்கிரசிலே ஒரு தீர்மானத்தின் மீது நாயக்கர் கன்னடத்தில் பேசினார். அவர் பேசியதை, அங்கு கூடியிருந்த கன்னடிய மக்கள் புரிந்துகொண்டார்களா இல்லையா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவர் சுமார் பதினைந்து நிமிஷம் பேசியிருப்பார். அதற்குள் பத்து தடவை அவர் உடுத்தியிருந்த வேஷ்டி அவிழ்ந்து போயிற்று. அவர் பேச்சை முடித்துத் திரும்பும்போது, மகாத்மா காந்தி அவர் காதில் ஏதோ சொல்லி அனுப்பினார். என் பக்கத்தில் வந்தமர்ந்த நாயக்கரை என்னவென்று கேட்டேன். "ஓ அதுவா, அவர் என் இடுப்பில் ஒரு பெல்ட் போட்டுக்கொள்ளச் சொன்னார்" என்றார்.

* * *

பெல்காம் காங்கிரஸை முடித்துவிட்டு, நானும் நாய்க்கரும் 'ஹம்பி' என்னும் விஜயநகர சமஸ்தானத்தின் பாழடைந்த நகரத்தைப் பார்த்து விட்டு ஊர் திரும்பினோம். நாங்கள் பிரயாணம் செய்தது மூன்றாம் வகுப்பு என்று சொல்லத் தேவையில்லை. வண்டியில் ஒரே கூட்டம். உட்கார்ந்த இடத்திலிருந்து நகர முடியாது. காலையில் ஒரு இரயில் நிலையத்தில் வண்டி நின்றதும், பிளாட்பாரத்திலிருந்த குழாயில் பல் துலக்கி முகம் கழுவ நான் வண்டியை விட்டுக் கீழே இறங்கும்போது நாய்க்கர் என் கையிலே தமது பித்தளைச் செம்பைக் கொடுத்து, "இதைக் கழுவித் தண்ணீர் பிடித்து வாருங்கள்" என்றார். செம்பை ஏன் கழுவச் சொல்லுகிறார்? இரவு நான் தூங்கிய பின்னர், எனக்குத் தெரியாமல் பாலோ, காபியோ, டீயோ செம்பில் வாங்கிக் குடித்திருப்பாரா என்று எண்ணிக் கொண்டே, என் கையிலிருந்த செம்பைக் குனிந்து பார்த்தேன். குபீரென்று மூத்திரவாடை அடித்தது. செம்பை பிளாட்பாரத்தில் வீசி எறிந்துவிட்டு நான் குழாயடிக்குப் போய்விட்டேன். நாயக்கர் தள்ளாடித் தத்தளித்துக்

கீழே இறங்கி, செம்பை எடுத்துக் குழாயில் கழுவி, அதில் தண்ணீரும் பிடித்துத் தன் வாயையும் முகத்தையும் கழுவினார். பாவம் நாயக்கர்! கடந்த இரவு ஜன நெருக்கத்தில் அவரால் எழுந்து கக்கூசுக்குப் போக முடியவில்லை! என்ன இருந்தாலும், சிறு நீருக்கும், குடி நீருக்கும், ஒரே செம்பை அவர் உபயோகித்ததை என்னால் சகிக்க முடியவில்லை.

*　　　*　　　*

நாயக்கரோடு பிரயாணம் செய்வதிலே ஒரு கஷ்டம். அவருடைய செம்புக் காசெல்லாம் அவருடைய கண்களிலே பொற்காசுகளாகத் தோன்றும். நமக்காக அவர் செலவு செய்வதாயிருந்தால், நமது மானம், மரியாதை எல்லாம் அவரிடம் அடகு வைக்க வேண்டும். அவருக்காக நாம் செலவு செய்வதைப்போன்ற பைத்யக்காரத்தனம் வேறொன்றும் இருக்க முடியாது. ஆதலால் இதற்கென்னடா வழி என்று யோசித்து, பெல்காமில் இரயிலேறு முன்பே அவர் கையிலே முப்பது ரூபாயைக் கொடுத்து, "இதுதான் என்னிடம் உள்ளது" என்று கூறிவிட்டேன். பிரயாணத்தை முடித்துக் கொண்டு ஈரோடு பிளாட்பாரத்தில் அவர் என்னிடம் விடை பெற்றுக் கொண்டார். நான் கோவைக்கு நேரே போக வேண்டும். வழிச் செலவுக்குக் கையில் இருக்கிறதா, ஏதாவது வேண்டுமா என்று பெரியார் என்னைக் கேட்காமலே போய்விட்டார்.

*　　　*　　　*

திரு. வி. க. அவர்களின் 'நவசக்தி'யை தினசரியாக்கப் போவதாகவும், அதற்குப் பொருளுதவி செய்யப் போவதாகவும் சொல்லிக்கொண்டிருந்த நாயக்கர் திடீரென ஈரோட்டில் 'குடி அரசு' வாரப்பதிப்பை 1925-ல் ஆரம்பித்துவிட்டார். ஆரம்ப விழா நடத்தியவர் திருக்கோயிலூர் ஞானியார் அவர்கள். கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்த ஈரோடு, கருங்கல்

பாளையம் வ. மு. தங்கப் பெருமாள் பிள்ளை அவர்கள் பி. ஏ. பி. எல். குடி அரசுக்குக் கூட்டாசிரியராக இருந்தவர். கொஞ்ச காலங் கழித்து விலகிக்கொண்டார். நாயக்கர் எழுதிய படிப்பதற்கும் கேட்பதற்கும் அசிங்கமான சில வார்த்தைகளைச் சகிக்க முடியாததே அவர் விலகியதற்குக் காரணம். துண்டு துணுக்குகள் என்ற வரிசையில் ஏதேதோ நாயக்கரே எழுதி, அவற்றின் கீழ் எனது பெயரைப் போட்டதால் நானும் நாயக்கரோடு கோபித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

* • *

குடி அரசு பத்திரிகையின் ஒரே நோக்கம் பார்ப்பனர்களை ஒழித்துக் கட்டுவதுதான். எலி பிடிக்கப் போனவன் எலி எங்கெந்த இடத்திலும் பொருளிலும் இருந்ததோ அதையெல்லாம் அழித்தொழித்துக் கடைசியில், வீடிருந்தால்தானே எலியிருக்கும், வீட்டையே ஒழித்துவிட்டால் எலி இராதல்லவா என்று தன் வீட்டையே எரித்துச் சாமபலாக்கிய கதைபோல நாயக்கரும் பார்ப்பனனுக்கும், பார்ப்பனீயத்துக்கும் எங்கெங்கே, எவ்வெவற்றில் வளர்ச்சிக்கும் செல்வாக்கிற்கும் இடமிருப்பதாகக் கருதினரோ அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்குவதென நிச்சயித்துவிட்டார். சாதியிலே, சடங்கிலே, சாத்திரத்திலே, கோயிலிலே, குளத்திலே, புராணத்திலே, இதிகாசத்திலே, மதத்திலே கடவுள் என்ற எண்ணத்திலே, எங்கெங்கு பார்ப்பனன் நுழைந்துள்ளானே அந்தஇடங்களையெல்லாம் நொறுக்கி விடவேண்டும் என்பதே அவர் கொள்கை. “காந்தியினுல் பார்ப்பனன் வளர்கிருனு, அப்படியானுல் காந்தி ஒரு கபடன், அயோக்யன், வேஷக்காரன் அவனைக் கொன்று விடு! காங்கிரசிலே பார்ப்பனன் வளர்கிருனு, அப்படியானுல் காங்கிரஸ் ஒரு பிற்போக்கு ஸ்தாபனம், பார்ப்பனக்கோட்டை, வைதீகப் பேட்டை, அடி காங்கிரஸை, சுக்குநூருக்கு! தேசியம் என்ற போர்வையில் பார்ப்ப

னீயம் வளருகிறதா, அப்படியானுல் தேசீயம் என்பது மோசடி, அது வேண்டாம். சுயராஜ்யம் வந்தால் வர்ணு சிரமம் வளருமா, அப்படியானுல் சுயராஜ்யம் என்பது வேண்டாம். வெள்ளேக்காரன் இந்நாட்டை விட்டுப் போகவே கூடாது!" இப்படியாக இந்நாட்டில் அவர் ஒன்றையும் மிச்சம் வைக்காது எவ்வித முன்னேற்றத் துக்கும் எதிரியாகத் தீர்ந்தார்.

* * *

தமிழ் நாட்டின் தலே சிறந்த தேசபக்தர்களில் ஒருவராயிருந்த நாயக்கர் இப்படிக் கெட்டுப் போன தற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லே. நாயக்கரை இப்படி ஆகும்படிச் செய்தவர் சக்ரவர்த்தி இராஜகோபா லாச்சாரியார் அவர்களே ஆவர். ஊரைக் கொளுத்தும் இராஜாவுக்குத் தீவட்டி பிடிக்கும் மந்திரியைப் போல இராஜாஜி அவர்களுக்கு ஒரு முரட்டு இராஜனும், ஒரு கிறுக்கு வைத்யநாதனும் துணேயாக இருந்தார்கள். நாயக்கர், நாயுடு, முதலியார், ஆச்சாரியார் ஆகிய நால் வரும் தமிழ் நாட்டின் நான்கு குரவர்களாய்த் திகழ்ந் தார்கள் ஒரு காலத்தில். இந்நால்வரில் இராஜாஜியே தலேவராக விளங்கினுர். அவர் கிழித்த கோட்டை மற்ற மூவரும் தாண்டாதிருந்தார்கள். இரண்யனுக்கும், இராவணனுக்கும் அளவுக்கு மிஞ்சிய வரங்களேக் கொடுத்து ஆண்டவன் கெடுத்தார். அதைப்போன்றே இராஜாஜி அவர்கட்கும் ஆண்டவன் அளவுக்கு மீறிய அறிவைக் கொடுத்து அவரைக் கெடுத்துவிட்டாரென்று சொல்லத் தோன்றுகிறது. அதனுல் தமிழ் நாட்டின் பொது வாழ்வே சீர்குலேந்துவிட்டது. தகுதியற்றவர்கள் கையில் இன்று அதிகாரம் சேர்ந்துவிட்டதென்று இராஜாஜி நெஞ்சம் குமுறுகிருர். இராஜாஜிக்குக் கொஞ்சம் மிதமான அறிவை ஆண்டவன் கொடுத்திருந் தால் இந் நிலே ஏற்பட்டிராது. பொது மக்கள் கொடுத்த பணத்திலே நடத்தப்பட்டு வந்த சேர்மாதேவி குருகுலத்

திலே படித்து வந்த பார்ப்பனப் பையனுக்கு ஒரு இடத்திலும் திராவிடப் பையனுக்கு வேறிடத்திலும் பிரித்து வைத்து உணவு வழங்கலாகாது என்ற நியாயமான தமிழர் கோரிக்கைக்கு இராஜாஜி அன்று சாதகமாய் நின்றிருந்தால், இன்று தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, பரதகண்ட முழுவதற்குமே அவர் முடிசூடாமன்னராகத் திகழ்ந்திருப்பார். பிறவியிலே உயர்வு தாழ்வு என்பது இல்லை என்று ஒரு தீர்மானத்தை தமிழர்கள் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றிய உடனே காங்கிரஸ் கமிட்டியிலிருந்த உச்சிக் குடுமிகளையெல்லாம் வெளியே ஓட்டிக்கொண்டு இராஜாஜி அன்று ஓடாதிருந்தால், இன்று உச்சிக் குடுமிகளையெல்லாம் அறுத்தெரிவதற்கு ஆளுக்கொரு கத்தி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும் நிலைமைக்கு நாயக்கரும் வந்திருக்க மாட்டார். காங்கிரஸை விட்டு ராஜாஜி கோஷ்டியார் அன்று ஓடிய பின்னர், சீனிவாசய்யங்காரும், சத்யமூர்த்தியும் மெல்லக் காங்கிரசில் தலை தூக்கினார்கள். நாயக்கர் நாயுடாதியார் விரட்டப்பட்டனர். முதலியார் மூலை சேர்ந்தார். சத்தியமூர்த்தியைத் தலை தூக்கவிடாமல் 1937-ல் இராஜாஜி சென்னைப் பிரதமரானார். 1939-ல் காமராஜரைச் சத்தியமூர்த்தி தமிழ்நாட்டின் தலைவராக்கினார். 1942-ல் இராஜாஜி காங்கிரஸைவிட்டு மறுபடியும் ஓடினார். 1946-ல் மீண்டும் உள்ளே நுழையப் பார்த்தார். திருப்பரங்குன்றத்தில் கிடைத்த அடியை வாங்கிக் கொண்டு. இராஜாஜி டெல்லிக்கு ஓட்டமெடுத்தார். டெல்லியிலிருந்து திரும்பிய பின்னர் 1952-ல்சென்னையின் பிரதமரானார். மீண்டும் காமராஜரின் கை ஓங்கவே இராஜாஜி விரட்டப்பட்டார். இப்போது எதிர்வீட்டிலே பிள்ளை பிறந்ததைக் கேட்டு, உலக்கை எடுத்துத் தன் வயிற்றில் அடித்துக்கொண்டவள் போன்ற நிலையில் இராஜாஜி வருந்துகிறார். இந்நிலையில் பெரியாரைக் குறைசொல்லி, என்ன பயன்?

*   *   *

*1926*-ம் ஆண்டில் எர்ணுகுளத்தில் ஒரு கதர் வஸ்திராலயம் நிறுவச் சென்றேன். கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பேசிமுடித்து, தளவாடங்கள் எல்லாம் தயார் செய்து, திருப்பூரிலிருந்து கதர் வரவழைத்து ஒழுங்காக அடுக்கித் தக்க விளம்பரமும் செய்து, நாயக்கரைக்கொண்டு திறப்புவிழா நடத்தவேண்டுமென்று தீர்மானித்து நாயக்கருக்கும் தந்தி அடித்தேன். நாயக்கரும் வந்து சேர்ந்தார். அன்று திறப்பு விழாவை முடித்து, மாலையில் ஒரு பொதுக் கூட்டத்திலும் பேசினார். அவர் வந்து சேர்ந்த காலையில், அவருடைய அழுக்குத் துணிகளையும், என்னுடைய அழுக்குத் துணிகளையும் எண்ணி ஒரு சலவைக்காரனிடம் கொடுத்திருந்தேன். அடுத்த நாள் சலவைத் துணிகளுடன் அவன் வந்தான். உருப்படிகள் எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று அவனிடம் கேட்டேன். அவன் ஆம் என்று சொல்லவே, அவனுக்குரிய கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டேன். அவன் சென்ற பின்னர், நாயக்கர் என்னை நோக்கி அவன் உங்களுக்குச் சொந்தக்காரனா என்றார். முன்பின் தெரிந்தவனா என்று மீண்டும் கேட்டார். உருப்படிகளை எண்ணிப் பார்க்காமல் அவனுக்குப் பணத்தையும் கொடுத்து அனுப்பிவிட்டீர்களே, இப்போது குறைவாய் இருந்தால் என்ன செய்வீர்கள். என்று கேட்டுக்கொண்டே போனார். அதற்குள் நான் மூட்டையைப் பிரித்து எண்ணிப் பார்த்து எல்லாம் சரியாய் இருக்கிறதென்றேன். "அப்படியானால் அந்த வண்ணான் ஒரு முட்டாள். அவன் புத்திசாலியாய் இருந்தால் இரண்டொரு துணியைக் குறைவாகக் கொண்டுவந்திருப்பான்" என்றார்! இந்த உலகிலே எவரையும் நாயக்கர் இலேசில் நம்பிவிடமாட்டார் என்பதை அன்று தெரிந்துகொண்டேன்.

* * *

மேலே கூறிய சம்பவம் நடப்பதற்கு ஓராண்டுக்கு முன்னுல் திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. சீனிவாசய்யங்கார், சத்திய மூர்த்தி முதலானேர் வந்திருந்தார்கள். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு இருந்தார். நாயக்கர் காரியதரிசி. கமிட்டி மெம்பர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். கோயமுத்தூர் ஜில்லாவின் பிரசார வேலையை என்னிடம் ஒப்படைத்தார்கள். பிரசார செலவுக்காக முன்பணமாக அறுபது ரூபாய் தருமாறு நாயக்கரிடம் கேட்டேன். "பணத்தை வாங்கிக்கொண்டு பிரசாரம் செய்யாமல் நீங்கள் வீட்டில் இருந்துகொண்டால் என்ன செய்வது? மாதமுடிவில், நீங்கள் போய்வந்த இடங்களையும், ஏற்பட்ட செலவுகளையும் குறிப்பிட்டு, பில் அனுப்பிப் பணம் பெற்றுக் கொள்வதுதான் முறை" என்று சொல்லிப் பணம் கொடுக்க மறுத்துவிட்டார். இதைக் கேட்ட வரதராஜுலு நாயுடு "பணம் கொடு" என்று நாயக்கருக்கு உத்தரவு போட்டார். நாயக்கரும் வேண்டா வெறுப்பாக என்னிடம் 60 ரூபாயை எண்ணிக் கொடுத்தார். நாயக்கர் கையிலிருந்து பணம் வாங்குவதை விடக் கல்லிலிருந்து நார் உறித்தெடுப்பது மிகச் சுலப மாக இருக்கும்.

* * *

நாயக்கர் கையில் பணம் கிடைத்தால் அது யானை வாயில் சிக்கிய கரும்பு மாதிரிதான். யானையாவது கரும்பைத் தின்று இன்பமுறும்: ஆனுல் பணத்தைச் செலவு செய்யாமல் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொள்வதில் நாயக்கருக்குத் தனி இன்பம். அவர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்தபோது ஹரிஜன முன்னேற்றத்துக்குச் செலவு செய்யுமாறு அவரிடம் பன்னிரண்டாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தது.

அப்பணத்தை வாங்கச் சிதம்பரம் சகஜானந்தா அவர்கள் நாயக்கரிடம் நடையாய் நடந்தார். நாயக்கரா கொடுப்பவர்? வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது ஆயிரம் ரூபாய் எப்படியோ மனமொப்பிச் செலவு செய்து விட்டார். இவரிடமிருந்து பல்லைப் பிடுங்குவதுபோலப் பாக்கிப் பதினோராயிரத்தை சத்யமூர்த்தியும் சீனிவாசய்யங்காரும் வாங்கிச் சென்னையில் காங்கிரஸ் மாளிகை கட்டச் செலவழித்தார்கள். பண விஷயத்தில் நாயக்கருக்கு one way traffic என்று பட்டம் சூட்டினால் நன்ருய் இருக்கும். அவருடைய சுயமரியாதை இயக்கத்துக்கு எத்தனை எத்தனை எத்தனை சல்லிக் காசுகள், ஒத்தை ரூபாய்கள், கத்தை நோட்டுகள் வாங்கியிருக்கிருர். அவற்றிற்குக் கணக்கு, வழக்கு, சுடுகாடு ஏதேனும் உண்டா? ஒன்றுமே கிடையாது!

* * *

நான் மேலே பிராஸ்தாபித்த திருச்சி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நடந்த சம்பவம் ஒன்று இப்போது என் ஞாபகத்தில் வருகிறது. காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர் இயக்கங்களிலே கலந்து கொள்ளக்கூடாது என்ற ஒரு விதி அப்போது அமுலில் இருந்தது. போத்தனூரில் நடந்த ஒரு இரயில்வே தொழிலாளர் கூட்டத்துக்குப் போய்வந்ததாக நாயக்கர் ஒரு பிரயாண பில் சமர்ப்பித்துப் பணம் எடுத்துக் கொண்டிருந்தார். அந்தக் கணக்கு சத்தியமூர்த்தி அவர்களின் கண்ணில் படவே, “இது என்ன நாயக்கர், தொழிலாளர் கூட்டத்துக்கு ஏன் போய் வந்தீர்கள்?” என்று கேட்டார். “காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர் இயக்கங்களில் கலந்துகொள்ளக் கூடாது என்பதை நேரில் போய் சொல்லிவிட்டு வந்தேன்” என்ருர் நாயக்கர்! “அதற்கொரு அரையணு கார்டு எழுதியிருந்தால் போதுமே” என்று சத்தியமூர்த்தி கூறவும், “விடு, விடு” அதெல்லாம் சில்லறை விஷயம்!” என்று

சமாதானப் படுத்தினர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார். “ இந்தச் சில்லறையைக் கணக்கில் எழுதி எடுத்திருக்க வேண்டாமே!” என்றேன் நான். இதனால்தான் என்னவோ நாயக்கர் அன்று எனக்கு அறுபது ரூபாய் கொடுக்க மறுத்தது.

* * *

கிடைத்ததை உண்டு, சுகத்தைத் துறந்து, போகம் மறந்து, அயர்வறியாது அல்லும் பகலும் காங்கிரஸில் உழைத்தது போலவே, ‘குடி அரசு’ தொடங்கிச் சுயமரியாதைப் பிரசாரம் செய்த காலத்தும் நாயக்கர், அன்பும், அறிவும், ஆவேச உணர்வும் பொங்கிட உழைத்தார் என்பது மிகையாகாது. ஐம்பதாண்டுகளில் செயற்கரிய காரியத்தை அவர் ஐந்தே ஆண்டுகளில் செய்து முடித்தது கண்டு வியப்படையாதவர் இலர். தமிழ் நாடெங்கும் ஒரே கிளர்ச்சி, ஒரே ஊக்கப் பிரவாகம். சாதிகள் பெயர்ந்தன. சடங்குகள் சரிந்தன. பார்ப்பனீயக் கோட்டைகள் கலகலத்தன. பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே என்று கவிச் சக்ரவர்த்தி சுப்ரமணியபாரதியார் பாடியதைநாயக்கர் மெய்ப்பித்துக் காட்டினர். மட்டுமரியாதையின்றி மற்றவரைப் பேசும் பார்ப்பனரின் நாத்துடுக்கை நாயக்கர் துண்டித் தெறிந் தார். கோவில் அர்ச்சகர்களுக்கு மதிப்பில்லை. கோவில் உற்சவாதிகளுக்குச் செல்வாரில்லை. சுவாமி ஊர் வலத்தின் முன்னே வாத்தியம் ஊதுகிறவர்களும், பந்தம் பிடிப்பவர்களும் தவிர மற்றவர்கள் போகவில்லை. பறைச்சியை பார்ப்பான் மணந்தான். தட்டாத்தியைச் செட்டி மணந்தான். முண்டச்சி முல்லை அணிந்தாள் என்றிவ்வாறன கலப்புமணச் செய்திகளும், சடங்கு களற்ற சு. ம. திருமணச் செய்திகளும் குடியரசுப் பத்திரிகையை நிரப்பின. குடி அரசுக்குப் பக்கபலமாக எண்ணற்ற பத்திரிகைகள் சு. ம. தொண்டன், சண்ட மாருதம், குமரன் என்று தோன்றின. அக்காலத்தில்

பல ஊர்களுக்கு நாயக்கருடன் சென்றேன். குடி அரசு பத்திரிகையின் பக்கங்களைக் கவிதைகளாலும், கட்டுரைகளாலும் நிரப்பினேன். பஞ்சமா பாதகம், மேயோ கூற்று மெய்யா பொய்யா என்ற நூல்களிலும் எழுதி உதவினேன். "சுயமரியாதை இயக்கத்துக்கு வழி காட்டி" என்று சொல்லும் அளவுக்கு நான் உழைத்ததாக நாயக்கரே இன்றும் கூறுகின்றார் என்றால் பாருங்களேன்!

* * *

1929-ம் ஆண்டில் என்று எண்ணுகிறேன். புஞ்சைப் புளியம்பட்டி என்ற ஊரில் அப்போது கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தேன். ஒரு நாள் நாயக்கர் என்னைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார். 'குடி அரசு' நஷ்டத்தில் ஓடுகிறது. என்னால் அதை இனி நடத்த முடியாது. அதன்பொறுப்பை நீங்கள் எடுததுக்கொண்டு நடத்தினால் ஆச்சு, இல்லாவிட்டால் இம்மாத முடிவில் நிறுத்திவிடப் போகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். "கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். யோசித்துச் சொல்லுகிறேன்" என்றேன். அதற்கவர் "யோசிப்பதற்கு ஒன்றும் நேரமில்லை. உங்களைத் தவிர எனக்கு வேறுயார்மீதும் நம்பிக்கை கிடையாது. உங்களை இரண்டிலொன்று கேட்டுவிட்டுப் போகவே இங்கு வந்தேன். நீங்கள் இணங்கியே ஆகவேண்டும். உங்கள் செலவுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்" என்றார். நாயக்கரின் கொள்கை எனக்குப் பிடித்தது. அவரது சுயமரியாதை இயக்கம் எனக்கு உயிராயிருந்தது. அது சோர்வடைவதைக் காண நான் விரும்பவில்லை. ஆனால் அவரது அற்பத்தனம், லோபிக் குணம், பிறரிடம் அவருக்குள்ள அவநம்பிக்கை, காசின்மீது அவருக்குள்ள மோகம் இவற்றை எல்லாம் எண்ணும்போது, அவருடன் சேர்ந்து ஒத்துழைப்பது எப்படி என்று எண்ணவே

என் மனம் நடுக்கம் கொண்டது. என்றாலும் மனத் துணிவு கொண்டேன். எனது நேர்மையும், உண்மையில் எனக்குள்ள பற்றும், எதற்கும் எவர்க்கும் எங்கும் அஞ்சாத பழக்கமும் எனக்கு அத்துணிவைக்கொடுத்தன என்பது தற்புகழ்ச்சியாகத் தோன்றலாம். நான் நாயக்கரிடம் சொன்னேன் : "என் செலவுக்கு நீங்கள் கொடுப்பது என்ற பேச்சு வேண்டாம். உங்கள் செலவுக்கு நான் மாதம் ஐநூறு ரூபாய் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் எழுதுவதை அப்படியே பத்திரிகையில் போட்டும் விடுகிறேன். அதைத் தவிர உங்களுக்கும் பத்திரிகைக்கும் எவ்வித தொடர்பும் இருக்கக்கூடாது. பத்திரிகையை ஈரோடில் நடத்த முடியாது. அதை நான் சென்னைக்கு எடுத்துச் செல்வேன். எனக்கு இஷ்டமான இடத்தில் அதை வைத்துக் கொள்வேன். எனக்கு இஷ்டமான பேர்களைச் சேர்த்துக் கொள்வேன். அவர்களுக்கு என் இஷ்டம் போலச் சம்பளமும் கொடுப்பேன். அச்சாபீஸை சென்னைக்கு மாற்றுவதற்கும், அச்சுக்களைப் புதுப்பிப்பதற்கும், இதர தேவையான சாமான்கள் வாங்குவதற்கும் நீங்கள் இரண்டாயிரம் ரூபாய் முன் பணமாகக் கொடுக்க வேண்டும். இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதமானால் சொல்லுங்கள்" என்றேன். நீண்ட நேரம் தர்க்கித்து என் முடிவை ஏற்றுக் கொண்டார்.

* * *

நாயக்கர் வந்து சென்ற அடுத்தவாரமே நானும் என் மனைவி கோவிந்தம்மாளும், எனது நாய்க்குட்டியுமாக ஈரோடு சென்றோம். பத்திரிகை சென்னைக்கு மாற்றப்படுவதாகவும், அதன் நிமித்தம் இரண்டு வாரங்களுக்குப் பத்திரிகை வெளிவராதென்றும் விளம்பரம் செய்துவிட்டு, எல்லாவற்றையும் கட்டி இரயிலேற்றிவிட்டு சென்னை சென்றேன். அங்கே மவுண்ட்ரோடிலுள்ள சர். தியாகராயர் மெமோரியல் கட்டிடத்தில் காலியாக

இருந்த குதிரை லாயத்தை வாடகைக்குப் பிடித்து அச்சு இயந்திரங்களையும், காரியாலயத்தையும் அங்கு அமைத்து இரண்டு வாரங்களில் பத்திரிகையை வெளி வரச் செய்தேன். அங்கு 'திராவிடன்' பத்திரிகையின் ஆசிரியராயிருந்த கனக சங்கர கண்ணப்பர் எனக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தார். உடுமலை வி. ராமசாமி நாயுடு என்பவர் உதவி ஆசிரியர். அவருக்கு மாதம் நாற்பத்தைந்து ரூபாய் சம்பளம். நாகர்கோயில் புலவரும், கவிஞருமான முத்துச்சாமிபிள்ளை, மொழி பெயர்ப்பாளர். அவருக்குத் தினம் இரண்டு ரூபாய், ஈரோடு க. கிருஷ்ணசாமி காஷியர், கணக்கு எழுத ஒருவர், டைப் அடிக்க ஒருவர், போர்மேன், பியூன், கம்பாசிடர்கள், விளம்பர ஏஜண்டுகள் என்றிவ்வாறாக எனது காரியாலயத்தின் தடபுடலைப் பார்த்து நாயக்கர் மூச்சடைத்துச் செத்துப் போவார் போல் தெரிந்தது. அவர் அவ்வாறு சாகாமலிருக்க அவருக்கு மாதாமாதம் ஐநூறு ரூபாய் செலுத்தி வந்ததோடு, பத்திரிகை விஷயமாக அவருக்கு எத்தகைய தொந்திரவோ கவலையோ ஏற்படாமல் தடுத்து வந்தேன். ஈரோடில் வாரம் எண்ணாயிரம் பிரதிகள் அச்சாகி வந்த 'குடி அரசு' வாரப் பத்திரிகை, சென்னை சென்ற பின் நாலைந்து மாதங்களில் பதிமூன்றாயிரமாக உயர்ந்தது. மலேயா, சிங்கப்பூர் தமிழர்கள் பணத்தைக் கணக் கிடாமலே அனுப்பினார்கள், "இதோ ஐம்பது ரூபாய் அனுப்பியிருக்கிறேன். தங்களுக்குப் பிடித்தமான புஸ்தகங்கள் சில அனுப்புங்கள். மீதியைக் 'குடி அரசு' சந்தாவாக வரவு வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவர்கள் வெள்ளியை அள்ளி வீசுவார்கள்.

* * *

சென்னை கோமளேஸ்வரன் பேட்டையில் மாதம் பதினைந்து ரூபாய்க்கு ஒரு வீட்டின் கீழ்ப்பாகத்தில்

பாதியைக் குடிக்கூலிக்குப் பிடித்து என் மனைவியுடன் குடும்பம் நடத்தினேன். என் குடும்பச் செலவிற்கும், என் சொந்தச் செலவிற்கும் மாதம் அறுபது ரூபாய்க்கு மேல் நான் ஒருமாதமும் குடி அரசு காரியாலயத்தி லிருந்து எடுத்துக்கொள்ளவில்லை. பிரதி தினமும் காலை எட்டுமணிக்கெல்லாம் காரியாலயம் சென்று விடுவேன். வீட்டிலிருந்து காரியாலயத்துக்கு நடந்தே செல்வேன். பகல் சாப்பாடு ஒரு தூக்குப் பாத்திரத்தில் காரியாலயத் துக்கே வந்துவிடும். கண்ணப்பருக்கு ஓட்டலிலிருந்து சாப்பாடு வரும். நானும் கண்ணப்பருமாகக் குடி அரசு காரியாலத்திலேயே பகலில் சாப்பிடுவோம். எப்போ தாவது நாயக்கர் வந்தால் அவரும் எங்களுடன் சாப் பிடுவார். ஒருநாள் பகல் எனக்கும் கண்ணப்பருக்கும் சாப்பாடுவந்திருந்தது. அன்று காலை வண்டியில் நாயக்கர் ஈரோட்டிலிருந்து வந்திருந்தார். ஆதலால் அவருக்கும் சேர்த்து சாப்பாடு அனுப்பி இருந்தாள் என் மனைவி. சாப்பிடுவதற்காக நாயக்கரும் கண்ணப்பரும் வந்தார்கள். "நீங்கள் சாப்பிடுங்கள். நான் இந்த தபால்களை முடித்துவிட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்ல, அவர்கள் இருவரும் என் மேஜைக்குச் சற்று தூரத்தில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். எனது பாத்திரத்திலிருந்த சாப்பாட்டைப் பார்த்த நாயக்கர், கண்ணப்பரிடம் "அய்யாமுத்து தனது யோக்யதைக்கு மீறிய சாப்பாடே சாப்பிடுகிறார்" என்று சொல்வது என் காதில் விழுந்தது. தலையை நிமிர்ந்து, கண்களை உருட்டி நாயக்கரைப் பார்த்தேன். அவர் ஒரு முட்டையைத் தன் வாயில் திணித்துக்கொண்டிருந் தார். என் மேஜைமீது ஒரு சாவிக் கொத்துக்கிடந்தது. அதை எடுத்து நாயக்கரைக் குறி பார்த்து அவர்மீது எறிந்துவிட்டு, ஒரு வினாடியும் அங்கு நிற்காமல் என் வீட்டுக்குப்போய் விட்டேன்.

* * *

வீட்டுக்குச் சென்றதும் பெட்டி படுக்கைகளை யெல்லாம் எடுத்துக்கட்டி பிரயாணத்துக்கு ஆயத்த மானேன். நாயக்கர் ஓடோடியும் என் வீட்டுக்கு வந்தார். "நான் என்ன சொன்னேன். இப்படிக் கோபித்துக்கொண்டீர்களே! வேடிக்கையாக ஒன்றும் சொல்லக்கூடாதா?" என்ருர். "எனது யோக்யதையை அளவிட உம்மிடம் அளவு கோல் கிடையாது. மரியா தையாய் போய்விடும்" என்று சொல்லிவிட்டேன். அவர் போன பின் கண்ணப்பர் வந்தார். அவரிடம் என் வழிச் செலவுக்கு இருபத்தைந்து ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு என் பெட்டியும், படுக்கையும், மனைவியுமாக சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று இரயிலுக்காகக் காத்திருந்தேன். அங்கே எனது நண்பர் கோவை சி எஸ். இரத்தினசபாபதி முதலியாரோடு நாயக்கர் பிரசன்ன மானுர். முதலியார் அவர்கள் எனக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். நானும் என் மனைவியும் அடுத்த நாள் புஞ்சைப் புளியம்பட்டி வந்து சேர்ந்து மீண்டும் கதரியக்கத்தில் ஈடுபட்டோம். சிறிது காலத்துக்கப்புறம் நாயக்கர் குடி அரசை மீண்டும் ஈரோட்டிற்கே மாற்றிக் கொண்டார். நாயக்கரின் குணத்தை நன்ருய் அறிந்திருந்த நான், அன்று அவரிடம் அவ்வாறு கோபித்துக்கொண்டு, நான் ஏற்றிருந்த பொறுப்பைத் தட்டிக் கழித்து வந்தது, வடிகட்டின முட்டாள்தனம் என்று பின்னுல் உணர்ந்தேன். ஆனுல், எனக்கு வரும் கோபம் மிகப் பொல்லாதது. அது எதையும் பொருட்படுத்துவதில்லை.

*　　　　*　　　　*

நாயக்கர் என்னை விட்டபாடில்லை. மீண்டும் என்னைத் தேடிக்கொண்டு புஞ்சைப் புளியம்பட்டி வந்தார். ஈரோட்டிலே எம். ஆர். ஜெயகர் அவர்கள் தலைமையின் கீழ் சுயமரியாதை மகாநாடு நடத்தப் போவதாகவும், அதன் ஏற்பாடுகளை நான் கவனித்துக்கொள்ள வர

வேண்டும் என்று கூறினர். என்னால் வர இயலாது என்று தெரிவித்தேன். மகாநாடு சம்பந்தமான முன்னேற்பாடுகளைக் கவனிக்க நான் வர இயலாது போயினும் மகாநாடு நடைபெறும் தினத்தன்று டிக்கட்டுகளை விற்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அக்காரியத்தைக் கவனிக்க வேறு எவரையும் நம்பத் தம்மால் இயலவில்லை என்றும் கூத்தாடினர். என்ன செய்வது என்று ஒப்புக்கொண்டேன். கோபிசெட்டிபாளையம் தாலூகாவில் மகாநாட்டுக்காக நல்ல தொகை வசூலித்துக்கொண்டு அவர் ஈரோடு சென்றார்.

அவரிடம் ஒப்புக்கொண்டபடியே மகாநாட்டுக்கு முந்தின இரவே ஈரோடு சேர்ந்து அப்பொறுப்பை ஒப்புக்கொண்டேன். மகாநாட்டின்போது ரூபாய் மூவாயிரம் சொச்சத்துக்கு டிக்கட்டுகள் விற்பனையாயின. மகாநாடு இரண்டு தினங்கள் நடைபெற்றதாக ஞாபகம். இரண்டாம் நாள் இரவு மகாநாடு முடிந்த பின், விற்ற பணத்தையும், விற்காத டிக்கட்டுகளையும் ஒப்புக்கொள்ளுமாறு நாயக்கரிடம் சொன்னேன். "இந்த நேரத்தில் என்னால் எப்படி முடியும் ?" என்றார். "நான் இன்றிரவே திரும்பியாக வேண்டும், பெரிய நாயக்கரிடம் கொடுத்து விட்டுப் போகட்டுமா" என்றேன். "ஐயையோ அவரிடம் வேண்டாம். மாப்பிள்ளை நாயக்கரிடம் (நாயக்கரின் தங்கை கண்ணம்மாள் அவர்களின் கணவர்) கொடுத்து விட்டுப் போங்கள்" என்றார்.

ஈரோடு மகாநாட்டின்போது மகாத்மாவின் தண்டி யாத்திரை நடந்து கொண்டிருந்ததென்று நினைக்கிறேன். "மற்றொரு போராட்டம் வந்தால் நான் காங்கிரஸில் எட்டிக் குதிப்பேன்" என்று நாயக்கர் மதுரைக் கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார். எனவே, நாயக்கரையும் அவரது சுயமரியாதை தோழர்களையும் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கச் செய்யவேண்டுமென என் போன்ற வாலிபர் பல்லோர் துடிதுடித்துக் கொண்டிருந்

தார்கள். தோழர் ப. ஜீவானந்தம் இத்தகைய ஒரு தீர்மானமும் கொண்டுவந்தார். நாயக்கர் என்னைத் தனிமையில் அழைத்து, "நாம் மேற்கொண்டுள்ள காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. தெருப் பிரவேசம், கோவில் பிரவேசம், குளப் பிரவேசம் என்ற போராட்டங்களை நாம் ஆரம்பித்து நடத்துவோம். தோழர் காந்தி ராஜீய முனையில் போராட்டம் நடத்தட்டும். நாம் சமூக முனையில் போராட்டம் தொடங்குவோம். இரு முனைகளிலும் வெள்ளைக்கார னுக்கு இம்சை கொடுப்போம். ஆதலால் நீங்கள் ஜீவானந்தம் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை எப்படியும் எதிர்த்துத் தோற்கடிக்கச் செய்யவேண்டும்" என்று கெஞ்சு கெஞ்செனக் கெஞ்சினர்.

நாயக்கரின் பேச்சில் நம்பிக்கை வைத்து, நான் பிறந்த பொன்னாட்டுக்குத் துரோகம் செய்தேன். ஜீவானந்தத்தின் தீர்மானத்தை நான் எதிர்த்துச் சுமார் அரைமணிக் காலத்தில் சுமார் இருபத்தைந்து நிமிஷங்கள் ஜீவானந்தம் அவர்களின் கட்சியை ஆதரிப்பதுபோலவே பேசினேன். எனது பேச்சைக் கேட்ட நாயக்கரும் மற்றும் அவரது ஆதரவாளிகளான சர். ஆர். கே. சண்முகம், திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் போன்ற பலரும், "என்னடா, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதைபோல் இருக்கிறதே! இவன் தீர்மானத்தை எதிர்க்கப் போவதாக நம்மிடம் உறுதி கூறிவிட்டு, இப்போது தீர்மானத்தை வெகு தீவிரமாக ஆதரித்தல்லவா பேசுகிறுன்" என்று திகைப் படைந்தார்கள்.

"புறப்படுங்கள் தண்டிக்கு! வெள்ளையன் வீழ்க என்று பலத்த குரலெழுப்பிச் சொல்லுங்கள்" என்றேன் எனது பேச்சின் இருபத்தி நான்காம் நிமிஷத்தில்.

நான் அன்று, எனதுள்ளத்து உணர்ச்சியை அடக்கி, பொய் வேஷம் கட்டி ஆடினேன் என்பது உண்மை.

அடுத்த நிமிஷத்தில் எனது கால்களை யாரோ பிடிப்பதுபோல் பாவனை செய்து, கீழே குனிந்து பார்த்தேன்.

"யாரடா நீ, ஏனடா என் காலைப் பிடிக்கிறாய். விடு, நான் தண்டிக்குப் புறப்படவேண்டும்."

"ஐயா! நானும் உங்களோடு வருகிறேன். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்."

"புறப்படு, ஏன் தாமதம்? எழுந்திரு; நட என் முன்னே."

"ஐயா! வருகிறேன். ஆனால் தாகம் நெஞ்சை அடைக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். குடித்துவிட்டு வருகிறேன்."

இவ்வாறாக நடித்துவிட்டு, சபையை நோக்கி, "கேட்டீர்களா! கருப்பன் கதறுவதை! அவனும் நம்மோடு வருவதாகச் சொல்லுகிறான். ஆனால் அவன் நா வரண்டு கிடக்கிறான். வாருங்கள் முதலிலே குளக்கரைக்குச் செல்வோம். கருப்பனின் தாகத்தைத் தீர்ப்போம். அவன் தாகந் தணிந்தபின், அவனும் நாமும் எல்லோருமாகச் சேர்ந்து அந்நியனை விரட்டப் புறப்படுவோம். சுதந்திர தாகம் பெரிதே. ஆனால் அதனிலும் பெரிது கருப்பனின் தண்ணீர்த் தாகம். சுதந்திரத்துக்காக நாளை போராடலாம். ஆனால் தண்ணீருக்காகப் போராடி, கருப்பனின் தாகத்தை தீர்க்காவிடில் கருப்பன் இறந்து பிணமாகிவிடுவான். காந்தியார் தண்டி செல்லட்டும். அவரைச் சார்ந்த பல்லாயிரம் பேர்கள் அவர் பின்னே செல்வார்கள். ஆனால் நாம் குளக்கரைக்குச் செல்வோம். நம்மோடு வருகிறவர்கள் கொஞ்சம் பேர்கள்தான். அக் கொஞ்சம் பேர்களும் தண்டிக்குப் புறப்பட்டுவிட்டால், பின்னர் கருப்பன் கதி என்னாவது? அவனுக்குத் தண்ணீர் தேடிக் கொடுப்பார் யார்?" என்று எனது முப்பதாவது நிமிஷத்தில் கர்ஜித்தேன்.

இச் சமயத்தில் கொட்டகையில் ஏற்பட்ட ஆரவாரம், கொட்டகையே அதிர்ந்து, பெயர்ந்து, இடிந்து விழும்போலிருந்தது. ஆனால் கொட்டகை விழவில்லை. ஜீவானந்தத்தின் தீர்மானம் விழுந்து தவிடு பொடியாயிற்று.

நான் மீண்டும் சொன்னேன் : " வெறும் பேச்சோடு நான் நிற்கப் போவதில்லை. காரியத்தில் உடனே இன்றே இறங்குவோம். எந்தக் குளக்கரையில், எந்தத் தெருக் கோடியில், எந்தக் கோவிலின் கோபுரவாயிலில் நின்று போர் தொடங்குவதெனத் தேர்ந்து தீர்மானிக்க ஒரு செயற் கமிட்டியை இப்போதே ஏற்படுத்துவோம். இம்மாத முடிவுக்குள் போராட்டத்தை தொடங்குவோம் " என்றேன்.

நான் சொன்னபடியே ஒரு கமிட்டியும் போட்டார்கள். ஆனால் அந்தோ மகாநாடு முடிந்ததும், நாயக்கர் பெருமான் கையிற் கிடைத்த பணத்தைச் சுருட்டிக்கொண்டு, எஸ். இராமநாதனோடு மேனாடு செல்லும் கப்பலில் ஏறிவிட்டார். நாயக்கரின் இக் கொள்கையை என்னவென்பது ?

மனம் நொந்து இடிந்துபோன நான், கோவையிலே " தேசிய சுயமரியாதை மகாநாடு " என்பதாக ஒன்றைக் கூட்டினேன். தேசியப் பற்றுள்ள சுயமரியாதைத் தோழர்கள் பெருவாரியாக வந்திருந்தார்கள். ஒரு தீர்மானத்தின் வாயிலாக நாயக்கரின் செயலைக் கண்டித்துவிட்டு, மற்றோர் தீர்மானத்தின் மூலமாகச் சுயமரியாதைக்காரர்கள் தேசியப் போரில் உடனடியாக குதிக்கவேண்டும் என்று முடிவு செய்தோம். எக் கூட்டத்திலும் பேசக் கூடாதென ஒரு தடை உத்தரவு எனக்கிருந்தது. அன்று அம் மகாநாட்டில் பேசிய குற்றத்துக்காக என்னை மறுநாள் கோவைச் சிறையினுள்ளே தள்ளினார்கள்.

* * *

மேனுடு சென்ற நாய்க்கர் புதுச் சரக்கோடு திரும்பி வந்தார். அதுதான் "கம்யூனிசம்!". என்றென்றும் ஏழைகளைக் கேவலமாக எண்ணி வந்த நாயக்கர் பொதுவுடமை பேசத் துணிந்தது பலரைப் பேராச்சர்யத்தில் ஆழ்த்திற்று. ஆனுல் நான் ஆச்சரியப்படவில்லை. அவரிடமிருந்த பழைய சரக்குகளுக்கு "மௌசில்லாமல்" போய்விட்டதால் புதுச் சரக்கு வாங்கி வந்திருக்கிறுர் என்பதை உணர்ந்தேன். பாபம் நாயக்கர், அவர் கொண்டுவந்த சரக்கை வைத்து வெகுநாள் வியாபாரம் செய்ய முடியவில்லை. அன்று அதிகாரத்திலிருந்த ஜஸ்டிஸ் கட்சியார் நாயக்கரை சிறையில் தள்ளினுர்கள். இனிமேல் பொதுவுடைமை பேசுவதில்லை என்று வாக்குறுதி அளித்து நாயக்கர் கோவைச் சிறையினின்றும் வெளியே வந்து ஈரோட்டு வாய்க்கால் கரையில் ராமா என்று குந்திக்கொண்டார். ஒரு திட்டம் என்று தயாரித்து, அத்திட்டத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் அனுப்பி, அத்திட்டத்தை யார் ஏற்றுக் கொள்ளுகிறுர்களோ அக் கட்சியில் தாம் சேரப் போவதாக பயமுறுத்தினுர். ஜஸ்டிஸ் கட்சியார் அதைக் கவனிக்கவில்லை. நாயக்கருடைய திட்ட மனைத்தையும் கராச்சி காங்கிரஸ் ஜீரணித்துவிட்டதாகத் தமிழ்நாடு காங்கிரஸ் சொல்லிற்று. நாயக்கரின் தாக்குதலுக்கு அதுகாறும் ஆளாகாதிருந்த கதரியக்கத்தையும் நாயக்கர் தாக்கலானுர். அவருக்குப் பதில் சொல்லும் முறையில் "இராமசாமியும்—கதரும்" என்றெழுதிப் பத்தாயிரம் புத்தகங்கள் அச்சிட்டுப் பிரசுரம் செய்தேன். நாகர் கோவிலேயடுத்த கோட்டாறு நண்பர்கள் பல்லாயிரம் பிரதிகள் அச்சிட்டு பிரதியொன்று ஒரு அணுவாக விற்ருர்கள். அன்று முதல் நாயக்கர் எனது தாக்குதலுக்கு ஆளானுர். சென்னையிருந்து வெளியான் "தமிழரசு" என்ற வாரப் பத்திரிகையில் எனது கட்டுரைகள் பிரதிவாரமும் இடம் பெற்றன. இதனுல் என் மீது நாயக்கருக்கு அடங்காக் கோபம் ஏற்பட்டது.

அவரது கை பாணங்களாகிய "புதுவை முரசு" போன்ற பத்திரிகைகளும், சு. ம. தோழர்களும் என்னை வரை முறையின்றித் தாக்கி, எனக்கு நல்ல விளம்பரம் தந்து உதவினார்கள்.

* * *

இந்தக் காலத்தில், திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திரம் என்ற ஊரிலே சமூக சீர்திருத்த மகா நாடொன்று நடந்தது. **W. P. A.** செளந்தரபாண்டியன் நாடார் அவர்கள் அம் மகாநாட்டின் தலைவர். அவர் எனது சிறந்த நண்பர்களில் ஒருவர். தங்கமானவர். டாக்டர் சுப்பராயனைப் போன்று எல்லோரிடத்திலும் 'ஜாலியாக'ப் பழகும் சுபாவம் உள்ளவர். அம் மகா நாட்டின்போது நான் திருக்குற்றாலத்திலிருந்தேன். நாடாரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு அம்பா சமுத்திரம் சென்றேன். என்னையும் பேசுமாறு அவர் கூறினார். நான் மறுத்துவிட்டேன். நாயக்கர் பேசி முடிந்தபின் மேடைமீது நானிருப்பதைக் கண்ட கூட்டத் தினர், என் பெயரைச் சொல்லி, நான் பேசவேண்டும் என்று கூச்சலிட்டார்கள். செளந்திரபாண்டியன் அவர் களும் என்னை அழைக்கவே, நான் வேறு வகையின்றி சிக்கிக் கொண்டேன். அன்று என் பேச்சினிடையே நான் சொன்னதாவது :—

" இம் மகாநாட்டிற்கு வந்திருக்கும் அரும் பெரும் தலைவர்களையும், அன்பர்களாகிய உங்களையும் கண்டு மகிழும் விருப்பத்தோடு நான் இங்கே வந்தேன். இம் மகாநாட்டுப் பந்தலில், ஒரு மூலையில் உட்காரச் சென்றேன். என்னைக் கண்டவர்கள், என் கையைப் பிடித்து இழுத்துவந்து, உங்கள் எல்லோர் கண்களிலும் படும்படியாக மேடைமீது உட்கார வைத்துவிட்டார்கள். என்னைக் கண்ட தலைவரும், நீங்களும், நான் பேசவேண்டு மென்று இங்கே நிற்கவைத்து விட்டீர்கள். நான் என்ன

பேசுவதென்று தெரியாமல் திண்டாடுகிறேன். இவ்வூரினுள் நுழையும்போது, சில வைதீகர்கள் ஒரு தெருத் திண்ணையில் உட்கார்ந்து இன்று வெளியான "சுதேசமித்திரன்" பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார்கள். பம்பாய் நகரத்திலே தேசீயக் கொடியேந்திச் சென்ற பெண்கள் கூட்டத்தைப் போலீசார் தடியால் அடித்துக் கலைத்தார்கள் என்ற செய்தியை ஒருவர் படித்தார். அதைக் கேட்ட மற்றொருவர், "ஹா" கிருஷ்ணு! இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவில்லையா?" என்று சொல்லிவிட்டுத் தம் வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக்கொண்டார். வேறொருவர் தன் வாயிலிருந்த எச்சிலைத் துப்பிவிட்டு, "அதர்மத்துக்கு ஒரு முடிவு காலம் வரும் என்று பகவான் கீதையிலே சொல்லவில்லையா?—அவசியம் வரும்" என்று விளாசினர். அத்துடன் அவ் வைதிகர்களின் தேச கைங்கர்யம் முற்றுப் பெற்றது.

இங்கே மகாநாட்டிற்கு வந்தேன். இராமசாமிப் பெரியார் பேசியதைக் கேட்டேன். "பம்பாயில் போலீசார் பெண்களை அடித்துக் காயப்படுத்தி விட்டார்களாம்! ஏன் அடிக்கமாட்டார்கள்? அவர்கள் அடித்ததில் என்ன தப்பு இருக்கிறது? இவர்கள்தான் பூர்வ ஜன்மத்திலும், கர்ம பலனிலும் நம்பிக்கை உள்ளவர்கள் ஆயிற்றே! நேற்று ஆதித் திராவிடர்களை இவர்கள் அடித்துத் துன்புறுத்தினர்கள். இன்று இவர்களை வெள்ளைக்காரர்களைக் கொண்டு ஆண்டவன் திருப்பி அடிக்கிறர். இவர்கள் பிறரை இம்சை செய்வதை நிறுத்திக்கொண்டால், பிறரும் இவர்களை இம்சை செய்ய மாட்டார்கள்" என்று பெரியார் புலம்பிவிட்டார். இப்புலம்பலோடு பெரியாரின் சேவையும் முற்றுப் பெற்றது.

இத்தகைய சேவை செய்யவா நீங்கள் இம் மகாநாடு கூட்டினீர்கள் என்று கேட்கத் தோன்றுகிறது. சற்றே

சிந்தித்துப் பாருங்கள். முகத்திலே சில பருக்கள் தோன்றுகின்றன. அவை கொப்பளங்களாக மாறிச் சீழ்வடிகின்றன. கொப்பளங்களுக்கு மருந்து பூசினுல் போதும் என்கிருர் பெரியார். கொப்பளங்களுக்கு மட்டும் மருந்து பூசினுல் பேர்தாது. உடலின் உள்ளே இரத்தம் கெட்டுப் போய்க் கிடக்கிறது. அக் கெடுதலின் வெளித் தோற்றம்தான் கொப்பளம். ஆகையால் நாம் கொப்பளங்களுக்கு மருந்து பூசுவதோடு நின்றுவிடாமல் இரத்தம் சுத்தியாக உள்ளுக்கும் மருந்து உட்கொள்ள வேண்டுமெனக் கூறுகிருர் காந்தியார். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் ?

இவ்வாருகத் தேசவிடுதலைக்குப் போராடவேண்டும்; அதே சமயத்தில் சமூக விடுதலைக்கும் பாடுபடவேண்டும், தேசவிடுதலை ஒன்றுதான் சமூக விடுதலையைத் துரிதப் படுத்திப் பொருளாதார விடுதலையைப் பூர்த்தியாக்க உதவும் என்ற எனது கருத்தை விளக்கிச் சுமார் ஒரு மணி நேரம் பேசினேன். கூட்டத்தினர் முகத்தில் ஒரு புதுத் தோற்றமும் உற்சாகமும் ஏற்பட்டது. எல்லோரும் கலகல வென்று கை தட்டிச் சிரித்து எனது கருத்தினை ஆமோதித்தார்கள். சிந்திக்கவேண்டிய இடங்களில் சிந்தனை மிகுந்து, அமைதி நிலவிற்று. கூட்டத்திலே இக் காட்சி பெரியாருக்குப் பெரும் வயிற்றெரிச்சலாய் இருந்தது என்று சொல்லத் தேவையில்லை. தம் ஒருவர் பேச்சைத் தவிர்த்துப் பிறர் பேச்சைக் கேட்டுக் கூட்டம் ரசித்தால், ஆரவாரம் செய்து கை தட்டினுல், பெரியாருக்குத் தலைவலியும், காய்ச்சலும், வயிற்றுப்போக்கும் வந்துவிடும் என்பதை அவருடன் சேர்ந்து உழைப்பவர்கள் அறிவார்கள். அதனுல்தான் பெரியார் தமது கூட்டத்திலே "அறிஞர்" களைச் சேர்த்து வைத்துக் கொள்வதில்லை. அவர் ஒருவரைத் தவிர யாரும் 'மேலே' போகக் கூடாது என்பது பெரியாரின் திடமான கொள்கையாம்.

* * *

அம்பாசமுத்திரம் மகாநாடு முடிந்த இரவு யாரோ ஒரு ஜமீன்தார் எங்களை எல்லாம் தமது அரண்மனைக்கு அழைத்துச் சென்று, ஆடு கோழிகள் பலவற்றைக் கொன்று, பக்குவமாய்ச் சமைத்து அரிய பெரிய விருந்தொன்று நடத்தி மகிழ்வித்தார். பாண்டிய நாட்டில் அவ்வளவு பெரிய விருந்துண்ட போதும், எங்கள் (கொங்கு) நாட்டின் தயிர்ச்சட்டியின் மணத்துக்கு ஏங்கிற்று என் மனம். அன்றிரவு பாபநாசம் நீர் வீழ்ச்சியை அடுத்த ஜாகையில் நாங்கள் தங்கியிருந்தோம். இரவு வெகு நேரம் வரையிலும் நானும், திருச்சித் தமிழன்பர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் மற்றும் சிலருமாகச் சேர்ந்து சௌந்திர பாண்டியன் அவர்களின் மடியின் கனத்தைக் குறைக்க உதவினேம். அதாவது மூன்று சீட்டுகள் விளையாடினேம். சௌந்திர பாண்டியன் நாடார் அவர்களின் மடி எப்போதும் கனத்திருக்குமே தவிர அவரது தலை அவர் உயிருள்ள வரை ஒரு நாளும் கனத்தது இல்லை. அந்த ஒப்பற்ற பெரியார், இன்று நம்மிடையே இல்லை.

நானும் நாயக்கர் அவர்களும், மூன்றும் வகுப்பு வண்டியில் ஒரு சிறிய பெட்டியில் திருநெல்வேலியிலிருந்து மதுரை போய்க்கொண்டிருக்கிறேம். எங்களோடு திருப்பத்தூர் (இராமநாதபுரம்) பள்ளிகொண்டான் என்பவரும் பிரயாணம் செய்கிறர். பள்ளிகொண்டான் அவர்கள் வெகுகாலம் மலாய் நாட்டில் இருந்தவர். சுயமரியாதை இயக்கத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்தவர். அவரும் அம்பாசமுத்திரம் மகாநாட்டில் கலந்து கொண்டு திருப்பத்தூருக்குத் திரும்பிப் போகிறர்.

வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. நாயக்கர் என்னிடம் சொல்கிறர் :

“ உங்களை மேடைமீது பேசவிட்டது தப்பு. அந்த சௌந்திரபாண்டியனுக்குப் புத்தி இல்லை. நீங்கள்

ஆச்சாரியாரின் கையாள் என்பது அவருக்குத் தெரியாது. நான் சமாதானம் செய்யாதிருந்தால் எனது ஆட்கள் மகாநாட்டில் பெரிய குழப்பத்தை உண்டாக்கியிருப் பார்கள். உங்களேயும் கூட்டத்தை விட்டு வெளியேற்றி இருப்பார்கள்."

இதைக் கேட்ட எனக்குக் கோபம் "சர்" என்று வருகிறது. நான் சொல்கிறேன்.

நான் யாருக்கும் கையாள் அல்ல. எனக்குக் கையாட்கள் கிடையாது. பிறருக்கு கையாளாயிருப்பது உங்கள் குணம். உங்கள் வயிற்றுப் பிழைப்பு நாடகம். ஒரு காலத்தில் ஆச்சாரியாரின் கையாளாக இருந்தீர்கள். இப்போது ஜஸ்டிஸ் கட்சியாரின் கையாளாக வேலே செய்கிறீர்கள். நீங்கள் எத்தகைய மனிதர் என்பது உங்கள் கையாட்களுக்குத் தெரியாது. உங்களே அப் படியே தூக்கி எறிந்து கொன்றுவிட என் கைகள் துடிக் கின்றன. என் கையால் நீங்கள் செத்தால் உங்கள் கையாட்கள் உங்களுக்கொரு கோவில்கட்டி, உங்களேயும் ஒரு தெய்வமாக வணங்குவார்கள் என்று அஞ்சி, உங்க ளுக்கு ஒரு பிளேக்கோ காலராவோ வந்து சாகட்டும் என்று விடுகிறேன்."

நாயக்கர் வாய்திறவாமல் இருக்கிருர்.

எங்கள் பெட்டியிலே ஒரு வக்கீல் உட்கார்ந்திருக் கிருர். அவர் "சுயமரியாதைக்காரர் எல்லாம் காலிப் பயல்கள்" என்கிருர் ஆங்கிலத்தில்.

"உம்மை யார் கேட்டது?" என்று எழுந்தேன் அவ்வக்கீலின் கழுத்தைப் பிடித்து நெறிக்க.

பள்ளிகொண்டான் துள்ளி எழுந்தார். நாயக்கர் திடீரென்று என்னேத் தாவிப் பிடித்துக்கொண்டார். வக்கீல் சங்கிலியை இழுக்கப்போனுர். நாயக்கர் என்னே

விட்டு விட்டு வக்கீலைப் பிடித்து சமாதானப்படுத்தி உட்கார வைத்தார். அடுத்த ஸ்டேஷனில் (விருது நகர் என்று நினைக்கிறேன்) வண்டி நின்றதும் வக்கீல் பரப்பரப்பாக இறங்கிச் சென்றவர் சென்றவர்தான். இப்படியாக நாயக்கர்மீது எழுந்த என் கோபம் வக்கீலின் மேல் பாய்ந்து மடிந்தது.

* * *

மேலே விவரித்த சம்பவத்துக்குப் பிறகு நாயக்க ருடன் எனக்கிருந்த தொடர்பு அற்றுப் போயிற்றென்றே சொல்லலாம். 1932-ம் ஆண்டு முழுவதும் நான் கோவைச் சிறையில் கைதியாக இருந்து, 1933-ம் வருஷம் பிப்ரவரி மாதம் விடுதலை அடைந்தேன். பின்னர் குடி நூல் என்ற பத்திரிகை தொடங்கி 1940 ஆண்டு முடிய நடத்தி வந்தேன்! இக்காலத்தில் பிரதி மாதமும் நாயக் கரை விடாது, அவரது வேஷத்தைச் சிறிது சிறிதாகக் கலைத்து வந்தேன். நான் சிறையிலிருந்து வெளி வந்த போது நாயக்கர் ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரகர் என்ற நிலைக்குத் தாழ்ந்து போயிருந்தார். அந் நிலை காண எனக்குப் பரிதாபமாயிருந்தது. 1937-ம் வருஷத் தேர் தலில் ஜஸ்டிஸ் கட்சி குழி தோண்டிப் புதைக்கப்பட்ட பின்னர், மறைந்தொழிந்த ஜஸ்டிஸ் கட்சிக்கு நாயக்கர் தனித் தலைவரானார். நாயக்கருக்கு தலைவர்பதவி ஒன்றிருந்தால் போதும், அது "நரக"த்திலாயினும் அக்கறையில்லை. இராஜாஜியின் மந்திரிசபை ஏற்பட்ட பின்னர் ஹிந்தி ஒழிப்புப் பிரசாரத்தை ஆரம்பித்து நாயக்கர் ஒருவாறு உயிர்பிடிக்கத் தொடங்கினார். அப் புறம் சேலத்தில் நடந்த மகாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சியை இவரே குழி தோண்டிப் புதைத்துவிட்டுத் திராவிடக் கழகத் தலைவராக அவதாரமெடுத்தார். அந்த அவதா ரத்தில் அவருக்குப் புதிய பலமும், புதிய சகாக்களும் கிடைத்தனர். பிரசாரம் வேகமும் பலமும் அடைந்தது. பள்ளிமாணவர்க்கிடையே ஒரு புதிய எழுச்சிஏற்பட்டது.

அண்ணுத்துரையாதியர் அடைந்த செல்வாக்கு நாயக்கரின் உள்ளத்தில் திகிலெழுப்பியது. போதாக் குறைக்கு மணியம்மையின் திருமணச் சடங்கும் நடைபெற்றது. நாயக்கர் இப்போது தனி மரமாகிவிட்டார். காற்று பலமாக அடிக்கும் திசை நோக்கி மரம் சாய்ந்தாடுகிறது. ஒரு படத்தைக் கிழிக்கிருர், ஒரு மண் பொம்மையை உடைக்கிருர்: காமராஜுக்கு ஜே! என்கிருர். எது செய்தாலும், என்ன செய்தாலும் அவரது வருவாய்க்குக் குறைவில்லாமல் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

* * *

காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் எப்போதும் கட்சிகளும் கோஷ்டிகளும் இருப்பதுண்டு. ஆதியிலே மிதவாதிகள் என்றும் பாலகங்காதர திலகரின் தீவிரவாதிகள் என்றும் இருந்தனர். அதன்பின் மகாத்மா காந்தியின் மாறுதல் வேண்டாதார் என்னும் ஒத்துழையாமைக் கட்சியும் தேசபந்து சி. ஆர். தாஸ், பண்டித மோதிலால் நேரு ஆகியோரின் சுயராஜ்யக் கட்சியும் இருந்தன. பின்னர் காங்கிரசுக்குள்ளாகவே சோஷியலிஸ்டு கட்சி என்பது உருவாயிற்று. அக் கட்சியின் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் ஒரு சமயம் திருப்பூருக்கு என்னைப் பார்க்க வந்தார். அவரோடு ஈரோடு எம். ஏ, ஈஸ்வரனும் வந்திருந்தார். தமிழ் நாட்டிலே காங்கிரஸ் ஸ்தாபனத்தை வலுப்படுத்த என்னென்ன செய்யவேண்டுமென்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் என்னேடு பேசிக்கொண்டிருந்தார். இராமசாமிப் பெரியாரையும் அவரது கூட்டத்தினரையும் காங்கிரசிலே சேர்த்துவிட்டால் நலமென்று அவரிடம் சொன்னேன். நாயக்கர் வெளியிட்டிருந்த திட்டத்தின் விவரத்தையும் அவரிடம் தெரிவித்தேன். மறுநாள் நாங்கள் ஈரோடு சென்று பெரியாரை அவரது இல்லத்தில் சந்தித்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். நாயக்கர் தமக்குரிய பண்பொடு,

எங்களை வரவேற்று, உபசரித்து, வெகு சிரத்தையோடு நாங்கள் சொல்வதைக் கேட்டு, காங்கிரஸ் சோஷியலிஸ்டுக் கட்சியின் கொள்கைக்கும் தமது திட்டத்துக்கும் எவ்வித மாறுபாடும் இல்லையென்றும், தமது கட்சியைக் கலைத்துவிட்டுக் காங்கிரசில் ஐக்யமாவதில் தமக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லையென்றும் தெரிவித்தார். அப்படியானால் நாம் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிடலாமா என்று நான் கேட்டேன். அதற்கவர், திருச்சியில் தமது கட்சியின் கூட்டத்தைக் கூட்டி, முறையாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிடுவதாக வாக்களித்தார். நாங்கள் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு பிரிந்தோம். நாயக்கர் வாக்களித்தபடி செயலில் ஒன்றும் நிறைவேறவில்லை. நாயக்கரின் தலையெழுத்தும், தமிழ்நாட்டின் தலையெழுத்தும் அப்படி இருந்ததென்றால் நாமென்ன செய்யமுடியும்?

*        *        *

சென்னை காங்கிரஸ் மந்திரி சபை ராஜிநாமாச் செய்த பிறகு ராஜாஜி பல்லடத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் தலைமை வகித்தார். அன்று இரவு திருப்பூரில் எனது தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ராஜாஜியும், டாக்டர் ராஜனும் பேசினார்கள். மறுநாள் ராஜாஜியோடு ஈரோடு சென்றிருந்தேன். ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள ஜில்லா போர்டு சத்திரத்தில் தங்கியிருந்தோம்.

"நாயக்கரைப் பார்க்கவேண்டாமா" என்றேன்.

அவர் ஊரில் இருக்கிறாரா? இருந்தால் பார்ப்போமே என்றார் ராஜாஜி.

நாயக்கர் ஊரில் இருப்பதாகத் தெரியவே பகல் மூன்று மணிக்கு வருவதாகச் சொல்லி அனுப்பினோம். நாயக்கரின் வீட்டுக்கு முன் கார் நின்றதும் நாயக்கர் ஒரு

மாலையைத் தூக்கிக்கொண்டு குடுகுடு என்று ஓடி வந்து ராஜாஜியின் கழுத்தில் போட்டு பயபக்தி விஸ்வாசத்துடன் வரவேற்ற காட்சி அற்புதமாய் இருந்தது.

உள்ளே கூடத்துள் ஒரு சாய்வு நாற்காலியின்மீது ஒரு பட்டு ஜமுக்காளம் விரித்திருந்தார். ராஜாஜி அதன் மீது அமர்ந்த பின் பல தட்டுகளில் பழ வர்க்கங்களும் மிட்டாய்களும் கொண்டு வந்து வைத்தார்.

“இதெல்லாம் எதற்காக இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டுவந்து வைக்கிறீர்கள்? இவ்வளவையும் சாப்பிட என்னுல் முடியுமா” என்று சொல்லிக் கொண்டே ராஜாஜி ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து உரிக்கலானுர்.

நாயக்கர் ஒரு சிறிய பெண்ணைப் பெயர் சொல்லி அழைத்தார். அப் பெண் வரவும், “இதோ ஐயா அவர்கள் வந்திருக்கிருர்கள். எங்கே ஒரு டான்ஸ் ஆடிக் காட்டு” என்று சொல்லவும் அப்பெண் “விதவா விவாகம்” என்ற பொருள்பற்றி அபிநயத்துடன் வெகு நேர்த்தியாக ஆடிக் காட்டினுள்.

வெகு நேரம் நாயக்கருடன் அதுவும் இதுவும் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அன்று மாலை ஏற்பாடாயிருந்த கூட்டத்துக்கு ராஜாஜியோடு நான் சென்றேன்.

* * *

குற்றுலத்தின் நீர்வீழ்ச்சிக்கெதிரே ஒரு லாந்தர் கம்பம் இருக்கிறது. அக்கம்பத்துக்கு ஆதரவாக ஒரு சிறிய மேடை. அம்மேடைமீது நாயக்கர் உட்கார்ந்து கொண்டு நீர் வீழ்ச்சியையும், அவ்வீழ்ச்சியின் அடியே நின்று குளிப்போர் காட்சியையும் கவனித்துக் கொண்டிருக்கிருர். இது 1941-ம் ஆண்டில் என்ற ஞாபகம். நான் அவரையே சற்று நேரம் கவனமாகப்

பார்த்திருந்துவிட்டு, அவருடன் பேசினேன். இருவரும் அருவியில் குளித்தபின்னர், அவர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றேன். ஐந்தருவி ரோட்டிலே ஒரு திருநெல்வேலிப் பிரமுகர் தமது பங்களாவை நாயக்கருக்குக் கொடுத்திருந்தார். ஒரு சமையற்காரனையும் அனுப்பியிருந்தார். சமையலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, விறகு முதலான பண்டங்களும், பாத்திரங்களும் கொடுத்திருந்தார் என்று எண்ணுகிறேன். நாயக்கரா சமைத்துச் சாப்பிடுகிறவர்? சமையல் செய்தால் அவருடைய ஜாகை சத்திரமாகி விடுமல்லவா? அவ்வளவு இலேசாக நாயக்கர் ஏமாந்தால் உலகம் என்னுவது?

குற்ருலநாதரின் கோவிலுக்கெதிரே ஒரு சைவ சாப்பாட்டுக் கடை. ஒரு "தனித்" தமிழனுல் நடத்தப்படுவது. ஆள் ஒன்றுக்கு வேளை ஒன்றுக்கு நான்கணு. எடுப்புச் சாப்பாடாக இருந்தால் ஐந்தணு. இந்தக் கடையிலிருந்து நாயக்கருடன் இருந்த சமையற்காரன் அன்ருடம் பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு எடுப்புச் சாப்பாடு எடுத்துப் போவான். அதில் பாதியை நாயக்கரும் அவனுமாகச் சாப்பிடுவார்கள். மீதியைப் பத்திரமாக மூடிவைத்திருந்து இரவில் உண்பார்கள். காலையில் இரண்டணுவுக்கு எட்டு இட்லிகள் வாங்கிவந்து இருவரும் சாப்பிட்டுவிடுவார்கள். இவ்வாருக நாளொன்றுக்கு ஏழு அணுக்களில் ஒரு செல்வந்தரும் (இரவல்) வேலைக்காரனுமாகத் திருக்குற்ருலத்தின் சீசனை அனுபவித்து வந்தார்கள். இத்தகைய சிக்கனத் துறையில் எங்கள் நாயக்கரை அணுக இவ்வுலகில் எவராலும் முடியாது. மகாத்மா காந்தியாலும் முடியாது. அவரைப் படைத்ததாகச் சொல்லப்படும் ஆண்டவனுலும் முடியாது: இந்த ஒரு நல்ல குணத்தையாவது நாயக்கரின் சீடர்கள் அவரிடமிருந்து பழகியிருந்தால் தமிழ் நாடு எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கும்! இந்திய

அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகராக நாயக்கரை நியமித்துவிட்டால் எப்படியிருக்கும். ஆனால் அவருக்கு மட்டும் குறைந்தபட்சம் மாதம் பத்தாயிரமாவது கொடுக்கவேண்டும்.

நானும் என் மனைவியும் கரையாளர் பங்களாவில் தங்கியிருந்தோம். அடுத்த நாள் பகல் சாப்பாட்டிற்கு வருமாறு நாயக்கரை அழைத்தேன். அவருக்குப் பக்குவமாக ஆடு கோழி முட்டை மீன் எல்லாம் சமைக்க ஏற்பாடு செய்திருந்தேன். நன்றாகச் சாப்பிட்டார். சாப்பிட்ட இடத்திலிருந்து அவரால் எழுந்திருக்க முடியவில்லை. ஒரு பாத்திரத்தில் கையைக் கழுவி விட்டு, அங்கேயே படுத்து அடிச்சாயும் வரை ஆனந்தமாகத் தூங்கினார்.

* * *

இரண்டாண்டுகளுக்குப்புறம் நான் திருச்சூரில் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். கும்பகோணத்திலிருந்து எனது நண்பர் கா. மு. ஷெரீப் அவர்கள் வந்திருந்தார்கள். கும்பகோணத்துக்கப்பால் காவேரி நதியின் மத்தியில் பெரிய விஸ்தாரமான ஒரு திட்டுப் பூமியை வாங்கி அதிலே ஆட்டுப் பண்ணையும் விவசாயப் பண்ணையும் நடத்தி வருவதாகவும் அதை நான் காண வேண்டு மென்றும் என்னை அழைத்தார். அவரும் நானும் திருச்சூரிலிருந்து ரயிலேறிப் புறப்பட்டோம்.

ஈரோடிலே ரயில் மாற வேண்டும். திருச்சி செல்லும் வண்டியில் இரண்டாம் வகுப்பில் நுழைந்தோம். கீழ்த்தட்டு ஒன்றில் ஒரு ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அருகில் ஒரு சிறிய பையன் நின்று கொண்டிருந்தான். அவனை விசாரித்தபோது நாயக்கருக்காக அவன் காத்திருப்பதாகத் தெரியவந்தது, பிளாட்பாரத்தில் "காய்கறியில்லாத" சோற்றுக் கடை

வைத்திருந்தவனைக் கூப்பிட்டு, முதல் தரமான சாப்பாடு கொண்டு வரும்படி சொன்னேன், "பிரியாணி," "சாப்ஸ்" "ஆம்லெட்," "குருமா" என்று அவன் தன் கடையில் உள்ளதை யெல்லாம் தட்டுகளில் கொணர்ந்தான். அத்தட்டுகளை எல்லாம் நாயக்கரின் ஜமக்காளத்தின் மீது வைக்கச் சொல்லிவிட்டு, நாங்கள் இருவரும் பிளாட்பாரத்தில் நாயக்கரின் வருகைக்காகக் காத்திருந்தோம்.

வண்டியினுள் நுழைந்த நாயக்கர் இதெல்லாம் என்னடா வென்று அருகிலிருந்த பையனைக் கேட்டார். நான் உள்ளே நுழைந்து, அவருக்கு வணக்கம் செலுத்தி இவையெல்லாம் தங்களுக்காக வரவழைத்தேன் என்றேன்.

"ஐயோ, என் உடல்நிலை முன் போல் இல்லை. பத்திய உணவு சாப்பிட்டு வருகிறேன். இதையெல்லாம் எதற்காகக் கொண்டுவந்தீர்கள்" என்று சங்கடத்துடன் கேட்டார்.

"என்ன செய்வது? நீங்கள் பிரியமாகச் சாப்பிடு வீர்கள் என்றெண்ணி ஆர்டர் கொடுத்துவிட்டேன். ஓட்டல்காரனுக்குப் பணமும் கொடுத்தாகிவிட்டது" என்று இழுத்தேன்.

"சரி சாப்பிட்டுத் தொலைக்கிறேன்" என்று தட்டுகளை யெல்லாம் ஒருவாறு காலி செய்துவிட்டார். நானும் நண்பர் ஷெரீப் அவர்களும் வெளியில் நின்று கொண்டிருந்தோம். அப்போது, பின்னல் ஜடையுடன் ஒரு பெண் உள்ளே நுழைந்தாள்.

"நான் ஒரு தப்புச் செய்து விட்டேன்" என்றார் பெரியார் அப்பெண்ணிடம்.

"என்ன அது?"

“ பிரியாணி சாப்பிட்டுவிட்டேன் ”

“ ஐயோ, ஏன் சாப்பிட்டீர்கள் ?”

“ எனது மிகப் பழைய நண்பரொருவர் பிரியத்தோடு வற்புறுத்தினர். தட்ட முடியவில்லை ”

“ உங்கள் நண்பருக்கு உங்கள் உடல் நிலை எப்படித் தெரியும்? நீங்கள் மறுத்திருக்க வேண்டாமா ?”

மேற்கண்டவாறு அப் பெண்ணும் பெரியாரும் பேசிக்கொண்டிருக்கையில், ஸ்பென்ஸர் சிப்பந்தியொருவன் எங்களைக் கடந்து சென்றான். ஓடிப் போய் ஒரு சோடா கொண்டுவா என்று அவனிடம் நான் கூற, அவனும் வெகுவிரைவில் சோடாவும் டம்ளருமாக ஓடிவந்தான். சோடாவைத் திறந்து டம்ளரில் ஊற்றி வண்டிக்குள்ளிருந்த நாயக்கரிடம் கொடுக்கச் சொன்னேன்.

“ யாருக்கு என்று பட்லரை விசாரித்து, டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டு, வண்டியைவிட்டுக் கீழே இறங்கி எனது பக்கத்தில் வந்து நின்றார் நாயக்கர். அப்பெண்ணும் அவர் அருகில் வந்து நின்றாள்.

“ இப் பெண் யாருங்க, புதிதாய் இருக்கிறது ? அவள் உங்களைப் போடும்போடு எனக்கே பயமாய் இருக்கிறது” என்றேன்.

“ இவளா ? ஆம். இவளுக்கு ஒரு நல்ல மாப்பிளை எங்கிருந்தாவது தேடிப் பிடியுங்கள் ” என்று பெரியார் சொன்னதும், அப்பெண் பெரியாரின் “ குண்டியின் ” மீது ஓங்கி அடித்துவிட்டு, ஒரே ஓட்டமாக ஓடி விட்டாள்.

அவள் சென்றபின் பெரியார், “ வேலூரில் ஒரு நண்பரின் மகள். ஸ்கூல் பைனல் வரை வாசித்திருக்கிருள். அவர்களுக்கு நமது இயக்கத்தில் அதிகப்

பற்றுதல், எனது காரியதரிசிபோல என்னுடன் இருந்து வருகிருள்" என்ருர்.

வண்டி புறப்படும் சமயமாயிற்று. பெரியார் உள்ளே நுழைந்து படுத்துக்கொண்டார். நானும் நண்பர் ஷெரிபும் அதேபெட்டியில் ஏறிப்படுத்துக்கொண்டோம். அதிகாலேக்கு முன்னரே ரயில் திருச்சி ஜங்ஷனே அடைந்தது. நாங்கள் மூவரும் கீழே இறங்கு முன்னர், அப்பெண் எங்கள் வண்டியின் முன்னேவந்து நின்ருள்!

"என்ன மணி! நல்ல இடம் கிடைத்ததா? நன்ருகத் தூங்கிஞயா?"

"ஓ! முதல்தரமான இடம். "சர்வென்ட்ஸ் கம்பார்ட்மெண்ட் (முதல், இரண்டு வகுப்பு பிரயாணி களின் வேலேக்காரர்களுக்கென்று அமைக்கப்பட் டிருக்கும் தனிப்பெட்டி) காலியாக இருந்தது. நன்ருய்த் தூங்கினேன்."

"அதுதான் பொய், இந்தப் பெண் தூங்கவே இல்லே. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டி நின்றதும், ஓடிவந்து உங்களே எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போனுள்" என்று ஒரு போடு போட்டார் நண்பர் ஷெரீப்.

இப்படியும் பூலோகத்தில் ஒரு பெண் இருப்பாளா என்று நான் மனதுக்குள் எண்ணிக் கொண்டேன். இச் சம்பவம் நடந்த சில ஆண்டுகளுக்கப்புறம், பெரியாரும் மணியும், புருஷனும் மனேவியுமாக மாறி விட்டார்கள் என்ற செய்தி தெரிந்ததும், "இப்படி ஏதாவது நடக்குமென்று நான் அப்பொழுதே நினேத்தேன்" என்று பெரியாருக்குக் கடிதம் எழுதி எனது மகிழ்ச்சியைத் (?) தெரிவித்தேன். என்னதான் எவ்வளவுதான் இராஜாஜி அவர்களே நாயக்கர் முகர்ந் தாலும், கசந்தாலும், துப்பினுலும், இராஜாஜியின்

வாக்கே நாயக்கருக்குத் தேவனின் திருவாக்காகச் சில சமயங்களில் அமைந்து விடுகிறது! திருவண்ணுமலை என்னும் திருப்பதிக்குச் சென்று, ஆச்சாரியார் அவர்களை வணங்கி, அவரது அருளும் கடாட்சமும் பெற்றபின் அல்லவா தமது தள்ளாத வயதில், மணி அம்மையை, ஒரு ஊன்று கோலாகக் கருதித் தம் கையில் பிடித்துக் கொண்டார்! நாயக்கரின் இந்தப் பொருந்தா மணத்துக்கு அப்புறம் தானே என்னவோ இராஜாஜி ஒரு கூட்டத்தில், புருஷனும் மனைவியும் ஒத்த வயதினரா யிருந்தால், இருவரும் ஏக காலத்தில் வயோதிகத்தை அடைந்து விடுவார்கள். அப்போது ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது அருமை, ஆதலால் புருஷனைவிட மனைவி பன்மடங்கு வயதில் குறைந்தவளாக இருந்தால், புருஷன் கிழவனுகும்போது, மனைவி திடங்குன்ருது அவனுக்குச் சேவை செய்து வரமுடியும், என்று பேசினர்!

திருச்சி ஜங்ஷனில் வண்டியை விட்டுக் கீழே இறங் கியதும், நானும் ஷரீபும் சூடான காபியைத் தேடிக் கொண்டு புறப்பட்டோம்.

“மணி! இதோ ஐயா காபி குடிக்கப் போகிறர். கூஜாவை எடுத்துக்கொண்டு அவர்களுடன் போ. கூஜாவில் ஒரு கப் காபி போட்டுக்கொள். நீயும் ஒரு கப் குடி. ஐயா துட்டுக் கொடுப்பார். நீ கொடுக்க வேண்டாம்” என்று கூறி அப்பெண்ணையும் எங்க ளுடன் அனுப்பிவைத்தார் பெரியார்.

காபிக்காக எங்கள் பிளாட்பாரத்தை விட்டு முதல் பிளாட்பாரத்தை அடைந்தோம். ஆனல் அந்த நேரத்தில் காபிக்கடை மூடிக் கிடந்தது. ஸ்டேஷனுக்கு வெளியே சென்று, ஒரு “சாயா” க் கடையில் ஆளுக்கொரு கோப்பை குடித்துவிட்டு பெரியாருக்கும் சூடாகக் கொண்டுபோய்க்கொடுத்தோம்.

பட்டுக் கோட்டையில் ஒரு கலியாணத்துக்குத் தலைமை தாங்கச் சென்ற பெரியாரும் அவரது அருமைக் காரியதரிசியும் தஞ்சை ரயில் நிலையத்தில் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டார்கள். நாங்களிருவரும் நேரே கும்பகோணம் போய்ச் சேர்ந்தோம். இந்தச் சந்திப்புக்கு அப்புறம் மணி அம்மையை இரண்டாந் தடவையாக 2-4-1957 ல் ஏர்க்காட்டு மலை உச்சியில் பார்த்த விபரத்தை இந் நூலின் ஆரம்பத்தில் கூறினேன்.

* * *

கோயமுத்தூர், அவனுசி ரோடில் உள்ள "கோபால்பாக்" எல்லோரும் காணத்தக்க இடம். உலகிலுள்ள விஞ்ஞான சாதனைகளை எல்லாம் பற்பல ரூபங்களில் அங்கே காணலாம். அதுபோலவே உலகிலுள்ள பெரியார், சிறியார், நல்லோர், பொல்லாதார், எல்லோரையும் பற்பல சமயங்களில் அங்கே காண முடியும். உலகாளும் வேந்தர் முதல் ஊர்த் தோட்டி வரை எல்லோரும் அங்கு வந்து போவார்கள். கோபால் பாகின் அதிபர் G. D. நாயுடு அவர்கள் மிகப் பெரிய புள்ளி. அவர் ஒரு விந்தை மனிதர்! அறிஞர்! ஆனால் கிறுக்கர். உலகெலாம் பன்முறை சுற்றி வந்தவர். ஆனால் உலகுடன் ஒட்டி ஒழுகக் கொஞ்சமும் தெரியாதவர். சட்டத்தில் நிபுணர். சண்டித் தனத்திலும் கெட்டிக்காரர். வல்லவர், அதேபோல் பொல்லாதவர். வயிறு புடைக்கப் போட்டாலும் போடுவார். வயிற்றுப் பசியோடு துரத்தினாலும் துரத்துவார். பணத்தை அள்ளியும் கொடுப்பார், கிள்ளியும் எடுப்பார். பணத்தை மலைபோல் குவிக்கவும் தெரியும், அதைத் தொலைக்கவும் அவருக்குத் தெரியும். கடந்த நாற்பது வருடங்களாக அவரை நான் பார்க்கிறேன். அவருடன் பழகுகிறேன். அன்று பார்த்தது போலவே இன்றும் என் கண்களுக்கு காட்சி அளிக்கிறார். அதே பேச்சு! அதே உடை! அதே நடை! அதே அன்பு! அதே மனிதர்! உலகில்

எல்லாம் மாறுகிறது. ஆனால் ஜி. டி. அவர்கள் என்றும் மாறாதவர். அவரிடம் ஆழ்ந்த மரியாதை எனக்கு அன்றும் இன்றும் என்றும் உண்டு. ஆனால் அவர் முன்னிலையில் இதுவரை அவரைப் புகழ்ந்தோ, ஆதரித்தோ ஒரு வார்த்தையும் நான் சொன்னதில்லை! அதற்கு மாறாகப் பன்முறை பேசியதுண்டு. உங்களைக் கீழ்ப் பாக்கத்துக்கு (பைத்யகார ஆஸ்பத்திரிக்கு) அனுப்ப வேண்டும் என்றும் சொல்லுவேன்.

அவருடன் பழகும் எல்லோரிடத்திலும் அவருக்குப் பிரியம் உண்டு என்று சொன்னால் அது தப்பாகாது. அவ்வளவு நல்லவர். ஆனால் குறும்புக்காரர். ஒரு நாள் இரவு கோபால் பாக்கிற்குப் போயிருந்தேன்.

"இன்று திருக்குறள் மகாநாடு நடக்கிறது உங்களுக்குத் தெரியுமா? வாங்கள் போவோம். பெரியார் ராஜாஜியை திருவண்ணாமலையில் சந்தித்து ஏதோ ரகசியம் பேசியிருக்கிறார். அது என்னவென்று தெரிய வேண்டும்." என்று சொல்லிக்கொண்டே, என் கையைப் பிடித்திழுத்துக் காரில் ஏற்றிக்கொண்டு போனார்.

"கோவை மேட்டுப்பாளையம் ரோடில் உள்ள சி. எஸ். ஆர். அவர்களின் காலி இடத்தில் பெரிய கொட்டகை போட்டு மகாநாடு நடந்துகொண்டிருந்தது. நாங்கள் கார் விட்டு இறங்குகையில் பெரியார் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசி முடிந்ததும், ஜி. டி. நாயுடு அவர்கள் மேடைமீதேறிப் பேசினார்.

"வள்ளுவர் பொய் சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். அவரது குறளைப் பிறருக்கு உபதேசிக்கும் பெரியார் பொய் சொல்லக் கூடாது. ராஜாஜியும் அவரும் திருவண்ணாமலையில் என்ன பேசினார்கள் என்று இங்கு கூடியிருக்கும் எல்லோருக்கும் தெரியும்படி அவர் சொல்லவேண்டும்" என்று

நாயுடு சொல்லவும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடிய விஷயம் ஒன்றும் இல்லை. சும்மா மரியாதைக்காக அவரைச் சென்று பார்த்தேன். எங்கள் சொந்த விஷயங்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்" என்றுபெரியார் சொல்லிய பதில் யாரையும் திருப்தி செய்யவில்லை.

மகாநாடு முடிந்ததும், மகாநாட்டுப் பந்தலில் ஒரு நாடகம் நடைபெறும் என்று சொன்னார்கள். அதற்குள் பங்களாவுக்குப் போய் வருவோம் என்று நாயுடு அழைக்கப் பெரியாரும் புறப்பட்டார். கோபால் பாக்கில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மகாநாட்டுப் பந்தலுக்குத் திரும்பும் வழியில் ஒப்பணக்காரத்தெருவிலிருந்த எனது கடைக்குச் சென்றோம்.

கருப்புச் சட்டையுடன் காட்சியளித்த பெரியாரைக் கண்ட என் மனைவி,

"இன்னும் எத்தனை வேஷங்களில் தங்களைக் காணப் போகிறேனோ தெரியவில்லை."

என்று சொல்லிக்கொண்டே வரவேற்றாள். என் மனைவி கோவிந்தம்மாள் பழுத்த காங்கிரஸ்காரி. பன்முறை சிறை சென்றவள். காங்கிரசுக்கு எதிராக உள்ள எந்த இயக்கத்திலும் அவளுக்குப் பற்றுதல் கிடையாது. அவளுக்குக் காங்கிரசே கோவில். காந்தியே தெய்வம்!

என் கடையிலிருந்த ஜவுளிகளை நாயக்கர் கவனித்தார். ஒரு கருப்பு நிற சில்க் பீஸை எடுத்துப் பிரித்து அவருக்கு வேண்டிய அளவு கிழிக்கப் போனேன்.

அதற்குள் பக்கத்தில் நின்ற ஜி. டி. அவர்கள் இங்கே ஜாலம் செய்துகொண்டிருந்தால் அங்கே

கொட்டகையில் நாடகத்துக்கு டிக்கட் விற்கும் பணமெல்லாம்.........என்று சொல்லி முடிப்பதற்குள், ஆமாம், ஆமாம், அயோக்கியப் பசங்கள், யாரையும் நம்பக்கூடாது" என்று சொல்லிக்கொண்டே ஓடிச் சென்று மோட்டாருக்குள் தாவிப் பாய்ந்தார் பெரியார்.

காரும் நகரக் கூப்பிய கரங்களுடன் நானும் என் மனைவியும் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தோம்.

**வாழ்க பெரியார் !**

# இந்தப் புத்தகம்...



**இராமசாமிப் பெரியாரை** கூட்டத்திலே பார்த்திருப்பீர்கள். அவர் பிரசங்கத்தைக் கேட்டிருப்பீர்கள். அவரது குறைகுணங்களைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அவருடன் முப்பதாண்டுகளுக்கு மேலாக நெருங்கிப் பழகி, ஒத்துழைத்து, உறவாடிப் போரும் தொடுத்த அய்யாமுத்து அவர்கள் இப்புத்தகத்திலே நமக்கு அரிய விருந்தளிக்கிறார்.

புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு தனிச்சுவை! புத்தகம் முழுவதும் ருசிகரமான சம்பவங்கள்!

பலநாட்கள் பலஊர்களைச் சுற்றிவிட்டுக் குளிக்காமலும், துவைக்காமலும் அழுக்குப்படிந்த சாமியாராகப் பெரியார் தம் வீடுதிரும்புகிறார். சின்னஞ்சிறு குழந்தைபோன்று குளிக்க மாட்டேன் என்று அடம்பிடிக்கிறார். அவரைக் குளிப்பாட்டப் பெரியாரின் வீட்டரசி நாகம்மையார் சதுர்வித உபாயங்களையும் கையாளுகிறார்.

இப்படி, இப்படியாக எத்தனையோ விநோத சம்பவங்கள்! கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் அவர் செய்ததும், செய்யத் தவறியதுமான எத்தனையோ காரியங்கள், உணர்ச்சியும், உள்ளன்பும், உண்மையும் குன்றாது நேர்மையுடன் கூறப்பட்டுள்ளன.

பெரியாரைப் போற்றுவோரும், தூற்றுவோரும் ஒருங்கே படித்து இன்புறத்தக்க அருமையான புத்தகம்!

Wrapper printed at Commercial Printing & Publishing House, Madras-1.